Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021493 0000 . விளம்பரம்: 021493 1111

சுடர் :35 கதிர் :256 ஆடி 28ஆம் நாள் புதன்கிழமை 12 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு!

*கண்டியில் பலத்த பாதுகாப்பு*

கொழும்பு, ஓக.12
அரசாங்கத்தின்புதிய அமைச்சரவை இன்று கண்டியில் பதவியேற்கவுள்ளது. முற்பகல் 8.30 மணியளவில் இந்த நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையி 23 >

## ஆட்டம் ஆரம்பம்

*ரணில், சாகல, ருவன் ஆணைக்குழுவுக்கு*

கொழும்பு, ஓக.12
முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன மற் 23 >

## 'கோதா'வில் இறங்கினார் தமிழரசு தலைவர் மாவை

### மத்திய குழுவை உடன் கூட்டுமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கத்துக்கு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் கட்சியின் அரசியற் செயற்குழுக் கூட்டத்தையும் கூட்டவேண்டும் எனவும் பணித்துள்ளார். 23 >

## இந்தியாவில் இருந்து கடலால் வந்தவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 12
இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் நேற்று உயிரிழந்தார். சிறுநீரக் செயலிழப்பு காரணமாக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
வல்வெட்டித்துறை ஊறணியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி பாலகிஸ்ணன் (வயது-52) என்பவரே உயிரிழந்தார். போர்க் காலத்தில் ஏதிலியாக அவர் இந்தியாவுக்குச் சென்றிருந்தார். இந்தியாவில் கொரோனா அதிகரித்திருந்த நிலையில், அவர் உட்பட நால்வர் கடந்த மாதம் 11ஆம் திகதி கடல் 21 >



## எனக்கு எதுவும் தெரியாது கைவிரித்தார் சம்பந்தன்!

கொழும்பு, ஓக.12
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசியப்பட்டியல் விவகாரம் தொடர்பில் நான் பதிலளிக்கமாட்டேன். இது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் துரைராஜசிங்கத்தி டம் கேட்கவும். அவர் தான் இந்தவிடயதானத்துக்குப் பொறுப்பு.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டி 23 >

## தமிழர் மனம் எம் வசம்; மஹிந்தர் புளகாங்கிதம்

### தமிழ்க் கூட்டமைப்பின் கோட்டையை பிடித்துவிட்டோம் எனவும் தம்பட்டம்

கொழும்பு, ஓக.12
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையாக விளங்கிய வடக்கு, கிழக்கை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் கைப்பற்றிவிட்டோம். கூட்டமைப்பை விடவும் அதிக ஆசனங்களைப் பெற்றுத் தமிழ் மக்களின் மனதை வென்றுவிட்டோம்.
இவ்வாறு பிரதமர் 23 >

## தீர்வு தராது இழுத்தடிக்க இனிக் காரணம் இல்லை

*பொறுப்பில் இருந்து தப்பமுடியாது என அரசுக்கு சம்பந்தன் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஓக.12
மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றியுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கியே ஆகவேண்டும். இனியும் சாக்குப்போக்குச் சொல்லாமல் நிரந்தர அரசியல் தீர்வை அரசு வழங்க வேண்டும். இந்தப் பொறுப்பிலிருந்து அரசு தப்பவே முடியாது.
இவ்வாறு தமிழ்த் 21 >

## தேசியப்பட்டியலால் திணறுகிறது ஐ.ம.ச.!

*நேற்றைய சந்திப்பும் தோல்வி முடிவெடுக்கும் அதிகாரம் சஜித்திடம்*

கொழும்பு, ஓக.12
ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனங்களை பங்கிடுவது தொடர்பில் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டமும் தோல்வியில் முடிவடைந்தது.
நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் 27 லட்சத்து 71 ஆயிரத்து 980 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு 7 தேசியப்பட்டியல் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன.
இந்தநிலை 21 >

## துணைவேந்தர் தெரிவுக்காக இன்று கூடுகின்றது பேரவை!

யாழ்ப்பாணம், ஓக.12
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்பதவிக்குவிண்ணப்பித்தவர்களில் இருந்து திறமை அடிப்படையில் மதிப்பீட்டின்படி முதல் 3 இடங்களைப் பெறுபவர்களின் பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைப்பதற்காக இன்று பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய 23 >

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating "A" (lka)



# தொல்பொருள், உள்ளக நிர்வாகம் பாதுகாப்பு அமைச்சின் கைகளில்

**கொழும்பு, ஓக.12**
**தொல்பொருள் திணைக்களம் இம்முறை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கை பொலிஸ், உள்ளக பாதுகாப்பு, உள்விவகார மற்றும் இடர் முகாமைத்துவம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.**

புதிய அரசின் 28 அமைச்சுகள் மற்றும் 40 இராஜாங்க அமைச்சுகளுக்குமான விடயதானங்களும் பொறுப்புகளும் அதிசிறப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை அறிக்கையான சுபீட்சத்தின் நோக்குக்கமைய நாட்டின் எதிர்கால பயணத்தை முன்னெடுக்கக்கூடிய வகையில் அமைச்சுகளுக்கான விடயதானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்திருந்தது.

தேசிய முன்னுரிமைக்கான தேசிய மட்ட வழிகாட்டல் மற்றும் இணைப்பினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களாக 7 நிறுவனங்கள் இந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம், கணினி அவசர நடவடிக்கை ஒன்றியம், முதலீட்டுச் சபை, கொழும்புத் துறைமுக நகரத்திட்டம், டெலிகொம் நிறுவனமும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களும் அனைத்து தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களும் இதில் அடங்குகின்றன.


இராஜாங்க அமைச்சுகளுக்கான விடயதானங்கள் ஒதுக்கப்பட்ட போது சுபீட்சத்தின் நோக்கிற்கு அமைவாக சில புதிய துறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, நிதி மற்றும் நிதிச்சந்தை, அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு எனும் இராஜாங்க அமைச்சும் உருவாக்கப்பட்டுள்ளது.

செயற்பாடுகள் குறைவாக உள்ள தொழில் முயற்சிகள் மற்றும் குறைவான பயன்பாட்டையுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளிக்கும் சட்டத்தின் கீழ் திறைசேரியின் செயலாளரின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களும் அதில் அடங்குகின்றன. (எ)

# சிங்கள அரசு உருவானதால் இனிப் பிரச்சினை இல்லை!

## ஞானசாரர் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.12
பௌத்த மக்கள் தனிச் சிங்களத் தலைவரைத் தெரிவு செய்ததைப் போன்று, சிங்கள அரசாங்கத்தையும் தெரிவு செய்துள்ளனர். பௌத்த மத உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற எமது போராட்டம் தொடரும். அபே ஜனபல வேகய கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் அத்துரலிய ரதன தேரருடன் எவ்வித முரண்பாடும் இல்லை.



இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பௌத்த மத உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சிறந்த சூழல் தற்போது தோற்றம் பெற்றுள்ளது. இனிவரும் காலங்களில் பௌத்த மத உரிமைகளைப் பாதுகாக்க போராட வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

அபேஜய பல வேகய கட்சிக்கு ஒதுக்கப்பட்ட தேசியப்பட்டியல் தொடர்பில் தற்போது மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. நாடாளுமன்றம் செல்வது தொடர்பில் அத்துரலியே ரதன தேரருக்கும், எனக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது.

பொதுத்தேர்தலின் பெறுபேறுகள் வெளியான தினத்தில் இருந்து அபே ஜன பல வேகய கட்சியின் பொதுச்செயலாளர் வேதனிய விமலதேரர் முறையற்ற விதத்தில் செயற்படுகிறார். கட்சிக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன. அதனால் ஒதுக்கப்பட்டுள்ள ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை தனக்கு வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு குறிப்பிட்டுள்ளார். அன்றிலிருந்து காணாமல் போயிருந்தார்.

கட்சி பெற்றுக்கொண்ட 67ஆயிரம் வாக்குகளை முறையற்ற விதத்தில் செயற்படுத்த பிரான்ஸ் நாட்டில் இருந்து திட்டமிட்ட வகையில் சூழ்ச்சி முன்னெடுக்கப்படுகிறது. அதற்கு ஆதரவாகவே பொதுச்செயலாளர் செயற்படுகிறார். தேசிய பட்டியல் தொடர்பில் காணப்படும் சிக்கல் நிலைக்கு தீர்வை பெற்றுக் கொள்ள மூன்று நிபந்தனைகளையும் முன்வைத்துள்ளோம்.

இவருக்கு எதிராக பௌத்த சங்க சபையில் உள்ள முறைப்பாடுகளையும், நீதிமன்றில் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை மற்றும் குற்றச்சாட்டுக்களில் இருந்து நீக்கல் மற்றும் பாதுகாப்பு வழங்கல் ஆகிய நிபந்தனைகளை விதித்துள்ளோம்.

அதை எவ்வாறு செயற்படுத்துவது?. இது தொடர்பாக முறையான பேச்சு ஊடாகத் தீர்வு பெற்றுக் கொள்ளப்படும். எமக்கு ஆதரவு வழங்கிய 67ஆயிரம் மக்களுக்கு ஒருபோதும் அநீதி ஏற்படுத்தப்படாது - என்றார். (எ)

# போதையில் சாரத்தியம்: ரூ. 30,000 தண்டம்

மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்று மூவருக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தங்கள்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். (ப9)

# மேர்வினின் மகன் கைது

கொழும்பு, ஓக.12
கொழும்பு. பத்தரமுல்ல பகுதியில் தொழிலதிபர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டு தொடர்பாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மாலக சில்வாவை கைதுசெய்ய தலங்க பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று நேற்று நுகேகொடையில் உள்ள மெர்வின் சில்வாவின் இல்லத்திற்கு சென்றிருந்தது.

எனினும் இதன்போது மேர்வின் சில்வாவும், அவரது மகன் மாலக சில்வாவும் அந் நேரத்தில் வீட்டில் இல்லாத நிலையில் பொலிஸ் சிறப்புக் குழு சோதனைகளை ஆரம்பித்திருந்தது.

பத்தரமுல்லை பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே மாலக சில்வாவை கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்றிரவு அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ)

# தம்மிக்க கங்கானாத் காலமானார்

கொழும்பு, ஓக.12
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் சிங்களம் மற்றும் வெகுஜன தொடர்பு பிரிவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் தம்மிக கங்கானாத் திசாநாயக்க தனது 62 ஆவது வயதில் நேற்றுச் செவ்வாய்கிழமை காலமானார். 1967 ஆம் ஆண்டு பிறந்த இவர் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுள்ளார். ஜப்பானுக்கான இலங்கை தூதுவராக செயற்பட்டுள்ள இவர் தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். (எ)

# "சிம்" அட்டை பெறுவதற்கு புதிய கட்டுப்பாடு விதிப்பு

கொழும்பு, ஓக.12
எதிர்காலத்தில் மக்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்படும் சிம் அட்டைகள் உள்ளிட்ட தொடர்பாடல் சேவைகளையே பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து அவர்களின் தொடர்பாடல் இணைப்புதுண்டிக்கப்படும் என்று இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் நேற்று செவ்வாய்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

இனிவரும் காலத்தில் மக்கள் தமது தேவைகளுக்கென சிம் அட்டைகள் மூலமான தொடர்பாடல் வலையமைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் போது, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் அங்கீகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோன்று தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள முகவர் நிலையங்களிடமிருந்து மாத்திரம் தொடர்பாடல் சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்படாத தொடர்பாடல் வலையமைப்புக்களால் விநியோகிக்கப்படும் சிம் அட்டைகள் உள்ளிட்ட தொடர்பாடல் சேவையைப் பெறுவோருக்கு எதிர்வரும் காலத்தில் அந்தச் சேவையைத் துண்டிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம். எனினும் ஏற்கனவே அத்தகைய சேவையைப் பயன்படுத்தி வருவோர் மீது இது எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தாது - என்றுள்ளது. (எ)

# 30 எம்.பிக்கள் இதுவரை இணையம் மூலம் பதிவு

கொழும்பு, ஓக.12
பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று 9 ஆவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 30 உறுப்பினர்கள் இதுவரை இணையத்தில் மூலமாக பதிவு செய்துள்ளனர் என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களின் விவரங்கள் தற்போது இணையத்தில் உள்ளன என்று அந்தத் திணைக்களத்தின் முகாமையாளர் ஷான் விஜேதுங்க தெரிவித்தார்.

இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் விவரங்களை நாடாளுமன்றத்தில் பெற்றுக்கொள்வதற்காக இணையப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றை அடுத்து, உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு செல்லாமல் இணையம் மூலம் விவரங்களை சமர்ப்பிக்கும் முகமாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று அலரிமாளிகையில் உத்தியோக பூர்வமாகத் தனது கடமைகளை பொறுப்பேற்ற சிறிது நேரத்திலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது விவரங்களை நாடாளுமன்ற செயலகத்தில் சமர்ப்பித்தார் என்றும் தெரிவிக்க படுகின்றது. (எ)

# பிடியாணைக்கு எதிராக குருநாகல் முதல்வர் ரிட் மனு

**கொழும்பு, ஓக.12**

**குருநாகல் மாநகர முதல்வர் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். தன்னைக் கைது செய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட பிடியாணையை இரத்து செய்யுமாறு கோரியே அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.**

இரண்டாவது புவனேகபாகு மன்னரின் அரசவை காணப்பட்டதாகக் கூறப்படும் இடத்திலிருந்த கட்டடத்தை சேதப்படுத்தியமை தொடர்பாக குருநாகல் மாநகர முதல்வர், நகர ஆணையாளர் மற்றும் மேலும் மூவரை நீதிமன்றத்தினூடாக பிடியாணை பெற்று கைது செய்யுமாறு சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, பதில் பொலிஸ்மா அதிபருக்கு முன்னர் பணிப்புரை விடுத்திருந்தார்.

இருப்பினும் குறித்த பிடியாணை உத்தரவை பொலிஸார் நிறைவேற்றத் தவறிய நிலையில் மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு அவர்கள் நாட்டை விட்டு வெளியேறவும் தடை விதிக்கப்பட்டது.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள குருநாகல் நகரசபை தலைவர் உள்ளிட்ட குழுவைக் கைது செய்வதற்காக 4 விசேட குழுக்களும் நியமிக்கப்பட்டன.

இந்த நிலையிலேயே குருநாகல் மாநகர முதல்வர் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். (ஐ)


## விடத்தற்பளை தனிமைப்படுத்தலில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ்ப்பாணம் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

மருத்துவமனை ஆய்வு கூடத்தில் நேற்று 100பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

போதனா மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்டவர்கள் 2 பேர், தனிமைப்படுத்தல் மையம் விடத்தல்பளை 9 பேர் (ஒருவருக்கு பேருக்கு தொற்று உறுதி), மன்னார் பொது மருத்துவமனை 4 பேர், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு 30 பேர், ஊர்காவற்துறை ஆதார மருத்துவமனை 5பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனை 5 பேர், பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு 20பேர், யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு 24 பேர், மற்றும் பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஒருவர் என் 100 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (து)



## கரவெட்டி பிரதேச செயலக கிராம அலுவலர்களுக்கு கொரோனா பரிசோதனை

யாழ்ப்பாணம், ஓக. 12

கரவெட்டி பிரதேச செயலகத்தில் கடமை புரியும் அனைத்து கிராம அலுவலர்களுக்கும் நேற்று இலவச கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்களுடன் நெருங்கிப் பழகும் அலுவலர்கள் என்ற வகையில் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால் கிராம அலுவலர்களுக்கு முதற்கட்டமாக இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கொரோனா பரிசோதனை செய்வது தொடர்பிலான அரச அறிவுறுத்தலின் பிரகாரம் இது நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (து-422)

### வடமராட்சி வலய


## கல்விப் பணிப்பாளருக்கு சனிக்கிழமை மணிவிழா

கரணவாய், ஓக12

வடமராட்சி கல்வி வலயக் கல்விப்பணிப்பாளரின் மணிவிழா நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வரவேற்புரையை பேராசிரியார் மா.நடராஜசுந்தரமும் ஆசியுரைகளை நெல்லண்டை ஸ்ரீபத்தி ரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள் சோமஸ்கந்தராஜக்குருக்கள், பருத்தித்துறை பங்குத்தந்தை அ.பெ.பெனற் அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர். கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.யோகநாதன் மணிவிழா நாயகனுக்கான வாழ்த்துப்பா வழங்கவுள்ளார். வாழ்த்துரைகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வடமராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், வல்லை மகளிர் கல்லூரி அதிபர் செல்வி இ.சுப்பிரமணியக்குருக்கள் பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணி, யாழ்ப்பாணக் கல்வி வலய முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா, வடக்கு மாகாண ஓய்வு நிலைக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராசேந்திரன், வடமராட்சி கல்வி வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா, யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ர விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர்.ஆ.சிறி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (108)

## தங்க சங்கிலியுடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஓக. 12

வல்வெட்டித்துறையில் திருடப்பட்ட சங்கிலியை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு 5 நாள்களுக்கு முன்னர் ஒரு வீட்டில் சங்கிலி திருடப்பட்டள்ளது. அது பற்றி வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் வீட்டுக்காரர் முறைப்பாடு செய்திருந்தனர். அது பற்றி விசாரணை நடத்திவரும் நிலையில் அதே இடத்தைச் சேர்ந்த 21 வயதுடையவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 2பவுண் நிறையுடைய சங்கிலி மீட்கப்பட்டுள்ளது. அவர் விசாரணையின் பின்னர் இன்று நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-26)

### யாழ்.பல்கலையின்

## 35ஆவது பட்டமளிப்பு 6,7,8ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி எதிர்வரும் ஒக்ரோபர் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிக ளில் நடத்தத் தீர்மானி க்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. கோரோனா தொற்றுப் பரவலைக் கருத்திற் கொண்டு, சுகாதார அமைச்சின் நடைமுறைகளைப் பின்பற்றி, தனியாள் இடைவெளி பேணப்பட்டு பட்டமளிப்பு விழாவை நடத்துவது பற்றி பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா குழுவினர் விரைவில் கூடி ஆராயவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

## பிரிவினைவாதக் கட்சிகளுக்கு மக்கள் பாடம் புகட்டியுள்ளனர்

### மொஹமட் முஸ்ஸமில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.12

பிரிவினைவாதம், அடிப்படைவாதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மோசடி, ஏமாற்று நடவடிக்கைகளை ஆதாரமாகக் கொண்ட அரசியல் அமைப்புகளுக்கு இம்முறை தேர்தலில் மக்கள் சிறந்த பாடத்தைக் கற்பித்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸ்ஸமில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரணில்விக்ரமசிங்க இல்லாத நாடாளுமன்றம் உருவாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த 55லட்சம் மக்களின் 28 லட்சம் மக்களே சஜித் பிரேமதாச ஆரம்பித்த ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளனர். ஒன்பது மாத காலத்தில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சஜித்பிரேமதாசவை கைவிட்டுச்சென்றுள்ளனர். மாகாண சபைத் தேர்தல் போன்ற எதிர்காலத்தில் நடக்கும் தேர்தல்களில் இதனை விட அதிகமானவர்கள் சஜித்தைவிட்டு செல்வார்கள் எனவும் முஸ்ஸமில் குறிப்பிட்டுள்ளார். (ப)

### ஒரு லட்சம் பேருக்கு வேலை

# வடக்கு மாகாணத்தில் 13,540 பேர் நியமனம்!!

**யாழ்ப்பாணம், ஓக. 12**
**நாடாளாவிய ரீதியில் ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்களை வழங்கும் திட்டத் தின் கீழ், வடக்கு மாகாணத்தில் 13 ஆயிரத்து 540 நியமனங்கள் வழங்கப் படவுள்ளன.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் சங் கானை பிரதேச செயலர் பிரிவில் 341 நியமனங்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 397 நியமனங்களும், நெடுந்தீவு பிர தேச செயலர் பிரிவில் 202 நியம னங்களும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் 435 நியமனங்க ளும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 123 நியமனங்களும், கர வெட்டி பிரதேச செயலர் பிரிவில் 535 நியமனங்களும், ஊர்காவற் றுறை பிரதேச செயலர் பிரிவில் 152 நியமனங்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 602 நியமனங்க ளும், நல்லூர் பிரதேச செயலர் பிரி வில் 699 நியமனங்க ளும், சண்டி லிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 1,029 நியமனங்களும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 311 நியம னங்களும், வடமராட்சி கிழக்கு பிர தேச செயலர் பிரிவில் 210 நியம னங்களும், வடமராட்சி வடக்கு பிர தேச செயலர் பிரிவில் 1,050 நியம னங்களும், வலிகாமம் வடக்கு பிர தேச செயலர் பிரிவில் 472 நியம னங்களும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 68 நியமனங்க ளும் வழங்கப்படவுள்ளன. இதன் படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒட் டுமொத்தமாக 6 ஆயிரத்து 626 நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டா வளை பிரதேச செயலர் பிரிவில் 564 நியமனங்களும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 1,176 நிய மனங்களும், பச்சிலைப்பள்ளி பிர தேச செயலர் பிரிவில் 159 நியம னங்களும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 362 நியமனங்களும் வழங்கப்படவுள்ளன. இதன்படி கிளி நொச்சி மாவட்டத்தில் ஒட்டுமொத்த மாக 2 ஆயிரத்து 261 நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 533 நிய மனங்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 193 நியம னங்களும், வவுனியா தெற்கு பிர தேச செயலர் பிரிவில் 170 நியம னங்களும், வெங்கலசெட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் 362 நிய மனங்களும் வழங்கப்படவுள்ளன. இதன்படி வவுனியா மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 258 நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலர் பிரிவில் 194 நியமனங்க ளும், மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 872 நியமனங்களும், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 329 நியமனங்களும், முசலி பிரதேச செயலர் பிரிவில் 172 நியமனங்களும், நானாட்டான் பிர தேச செயலர் பிரிவில் 263 நியம னங்களும் வழங்கப்படவுள்ளன. இதன்படி மன்னார் மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 830 நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 150 நியமனங்களும், கரை துறைப்பற்று 303 நியமனங்களும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரி வில் 378 நியமனங்களும், புதுக்கு டியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 423 நியமனங்களும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 217 நியம னங்களும், வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 94 நியமனங்க ளும் வழங்கப்படவுள்ளன. இதன் படி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட் டுமொத்தமாக ஆயிரத்து 565 நிய மனங்கள் வழங்கப்படவுள்ளன. (ம)

# மாகாண அதிகாரத்தை கைப்பற்றியே தீருவோம்!

### பிள்ளையானின் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 12
தமிழ் மக்களின் அரசியல் தீர்வின் அடிப்படை அல கான மாகாண சபையை வென்றெடுத்து அதனைப் பயன்படுத்தி எமக்கான நியாயமான அடிப்படைத் தீர்வைப் பெறும்வரை நாம் ஓயப்போவதில்லை என தமிழ் மக்கள் விடுத லைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலர் பூ.பிர சாந்தன் குறிப்பிட்டுள் ளார்.

நடைபெற்று முடிந்த தேர் தல் தொடர்பில் தமிழ் மக் கள் விடுதலைப்புலிகள் கட்சி விடுத்துள்ள அறிக் கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

'நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்த லில் மட்டக்களப்பு மாவட் டத்தில் எமது தலைவரை யும் கட்சியையும் ஏற் றுக்கொண்டு இமாலய வரலாற்று சாதனையை நிகழ்த்தக் காரணமாக இருந்த ஒவ்வொரு பிரம் மாக்களுக்கும் எம் சிரம் தாழ்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின் றேன். குறிப்பாக இரவும் பகலும் ஊன்உறக்கம் மறந்து கட்சிக் கொள்கை யைத் தம் கொள்கையா கக் கொண்டு எம்மோடு களத்தில் நின்ற வேட்பா ளர்கள், கட்சியின் உயர் பீட, செயற்குழு, பிரதேச அமைப்பாளர்கள், உள் ளூராட்சிமன்ற உறுப்பி னர்கள், எம் உயிருக்கு நிகரான கட்சியின் போரா ளிகள் அனைவருக்கும் தலைவர் சார்பாகவும் கட்சி சார்பாகவும் சிரம் தாழ்த்தி நன்றி நவில் கின்றேன்.

எழுபது வருடகால பாரம் பரிய மேலாதிக்கத்திற்கு எதிராகவும், மேலைத்தே சத்தின் முகத்திரை யையும் கிழித்தெறிந்து எமக்கான தலைமைத்து வத்தை இந்நாடாளுமன்ற தேர்தலின் ஊடாக உறுதி செய்த எம்மக்களுக்கு இவ்வெற்றியை காணிக் கையாக்குகின்றேன்.

ஐந்து வருட காலமாக உரிய விசாரணைகள் இன்றி அரசியல் காழ்ப்பு ணர்ச்சியின் நிமித்தம் நல்லாட்சியின் கூட்டுச்சதி யில் தலைவர் சிறைப் படுத்தப்பட்டபோதும் தலைவருக்காய் தன்னு யிரை தானம் செய்யவும் துணியும் தொண்டர் களை பெற்றிருப்பது எமது வரம். அத்தலைவ ரின் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்த சிற்பிக ளாய் ஒவ்வொரு கட்சித் தொண்டனும் களத்தில் நின்று இவ்வரலாற்றுத் திருப்பத்தை நிகழ்த்த கார ணமாய் இருந்தனர்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வின் அடிப்படை அல கான மாகாணசபையை வென்றெடுத்து அதனைப் பயன்படுத்தி எமக்கான நியாயமான அடிப்படைத் தீர்வைப் பெறும்வரை நாம் ஓயப் போவதில்லை' எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம)

### குருநாகல் மேஜர் உள்ளிட்ட

## ஐவரைக் கைதுசெய்ய 6 சிறப்புக் குழுக்கள்

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள குருநாகல் நகர மேயர் துஷார சஞ்ஜீவ விதாரண உள்ளிட்ட 5 சந்தேகநபர்களைக் கைது செய் வதற்கு 6 விசேட குழுக்கள் நிய மிக்கப்பட்டுள்ளன.

குறித்த பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட அத்தியட்சகரின் தலை மையில் விசேட குழுக்கள் நிய மிக்கப்பட்டுள்ளன. (ம)

## ஐ.தே.கவின் இடைக்கால தலைவராக கரு?

முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய இடைக்காலத் தலைவராக இருப்பதற்கு நிபந்தனைகளுடன் ஒப்புக்கொண்ட தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு புதிய தலைவர் ஒருவரை நியமிக்கும் வரை ரணில் விக் ரமசிங்கவே குறித்த பதவியில் இருப்பா ரென அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது தெளிவான தலைமை கிடைத்த பின்னர் பதவியில் இருந்து விலகுவதாகக் கூறி யுள்ள ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமை யிலான இடைக்காலத் தலைமைக் குழுவை நியமிக்க முன்மொழிந்தார். அதற்கு கரு ஜெயசூரியவும் நிபந்தனை களுடன் ஒப்புக்கொண்டுள்ளதாக அக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப)

## மேல்மாகாணத்தில் 417 பேர் கைது!

கொழும்பு, ஓக. 12
மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சுற்றிவளைப்பில் போதைப்பொ ருட்களுடன் 417 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

அவர்களில் 182 பேர் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம)

# சலுகைகளுக்காக செயற்படாமல் மக்களுக்காகச் செயற்படுங்கள்!

### புதிய எம்.பிக்களிடம் சிவசேனை கோரிக்கை



நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற் றவர்கள் மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசவேண்டும். சலுகைகளுக் காகசெயற்படாமல்மக்களுக்காகச்செயற் படுங்கள்என்று சிவசேனை அமைப்பின் வவுனியா மாவட்டத்திற்கான அமைப்பா ளர் அ.மாதவன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்க அலுவலகத்தில்நேற்று இடம்பெற்றஊட கவியலாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதேஅவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கில் பலரது நாடாளுமன்றக் கதிரைகள் இல்லாமல் போயிருக்கின் றன. அதற்கான காரணத்தை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். மக்களின் பிரச்சினைகள் பல இருக்கின்றன. பல அபிவிருத்திகள்தடைப்பட்டிருக்கின்றன. காணாமல் போனவர்களின் பெற்றோர் கள் வீதிகளிலே இருக்கின்றனர். சிறைக ளிலேதமிழ் இளைஞர்கள்வாடிக்கொண் டிருக்கின்றனர். இவற்றுக்கான தீர்வி னைப் பெற்றுக்கொடுக்க முடியா விட்டால் நீங்கள் எதற்காக நாடாளுமன் றம்செல்லவேண்டும் என்பதுஎமதுகேள் வியாக இருக்கின்றது.

அற்பசொற்ப சலுகைகள் மற்றும் அர சாங்கத்தின் கொடுப்பனவுகளைப் பெறு வதை நோக்கமாகக் கொள்ளாமல் மக் கள் உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப் பியதற்கானகாரணத்தைநீங்கள்புரிந்து கொள்ளவேண்டும். தற்போது உங்க ளுக்கு நாடாளுமன்றம் செல்லக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. மக் கள்உங்களைஆதரித்திருக்கின்றார்கள். எனவே இந்தப் பயணத்திலாவது மக்க ளின் தேவைகள் பற்றிப் பேசுங்கள். மக் களின் உணர்வுகளை மதியுங்கள் - என் றார். (ம-110)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# புதிய கூட்டு காலத்தின் தேவை

நாட்டில் இப்போது அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மை அரசொன்று தெற்கில் உருவாகியுள்ளது. தெற்கில் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டுள்ள அதேநேரத்தில், தமிழ் அரசியல் நிலைவரம் படுபாதாளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த பொதுத் தேர்தலில் பெரும் பின்னடைவைக் கண்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் அரசுக் கட்சிக்குள் சிலரால் எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவுகள், புலி நீக்க அரசியல், பதவி ஆசை என்பன இந்தப் பின்னடைவுக்குக் காரணம் என்பதை மறுக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடைவுகளுக்கு முக்கியமான காரணமாக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம்.ஏ.சுமந்திரன் எடுத்த தன்னிச்சையான முடிவுகளே. பல சந்தர்ப்பங்களில் அது சுட்டிக்காட்டப் பட்டபோதும், தமிழ் அரசுக் கட்சியின் தலைமை கண்டு கொள்ளாது இருந்ததன் பலாபலனே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய பின்னடைவு.

தமிழ் மக்களின் அரசியல் பலத்தைக் குறைப்பதில் தெற்கு திட்டமிட்டுச் செயற்படுகின்றது. நாட்டின் ஜனாதிபதியினதும், பிரதமரினதும் சகோதரர் பஸில் ராஜபக்ச அதை வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார். இந்தப் பின்னணியில் தமிழ் அரசியல் தலைமைகள் பிரிந்திருப்பது ஆரோக்கியமானது அல்ல.

தற்போது தேசியப் பட்டியல் ஆசன நியமனத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமலும், தமிழ் அரசுக் கட்சியின் தலைவருக்குக் கூடத் தெரியப்படுத்தாமலும் ஒரு சிலரால் எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவு செயற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களைப் போன்று விட்டுக்கொடுப்புக்கள் இன்றி இறுக்கமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டிய கடமை தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு உண்டு.

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெறுவதற்கு தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை அதிகரித்துக் கொள்வது அவசியமானது. அதற்கு தன்னிச்சையாகச் செயற்படும் புலி நீங்க அரசியல் மேற்கொள்ள முயற்சிக்கும் நபர்களை ஒதுக்கிவிட்டு புதிய கூட்டு ஒன்றுக்குள் செல்ல வேண்டிய காலத்தின் தேவை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நகர்வை மேற்கொள்வது ஒன்றும் புதிதல்ல. ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக ஆனந்தசங்கரி இருந்தார். ஆனால் அவர் புலி நீக்க அரசியலை முன்னெடுக்க முயற்சித்ததால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து ஒதுக்கப்பட்டார்.

தமிழ்த் தேசியக் கொள்கையுடைய தமிழ்க் கட்சிகளை இணைத்து புதிய கூட்டு ஒன்றை உருவாக்குவதன் ஊடாகவே தமிழர் அபிலாசைகளை வெற்றிகொள்ள முடியும். திட்டமிட்டுத் தமிழர் அரசியல் பலத்தை இல்லாதொழிக்க முயலும் பெரும்பான்மை அரசை எதிர்கொள்ள தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றிணைவது தவிர்க்க இயலாத ஒன்று.

**தமிழ் அரசுக்கட்சி இறுக்கமான போக்கைக் கைவிட்டு, தமிழ்த் தேசியக் கொள்கைகளை வெளிப்படுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி போன்ற கட்சிகளுடன் கூட்டு ஒன்றை உருவாக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டும். இதுவே தமிழ் அரசியல் தலைமைகளின் முன்னுள்ள அவசரத் தேவை.**

# ரணிலின் விலகல் தொடர்பில் இன்னும் தீர்மானம் இல்லை!!

## ஐ.தே.க. அறிவிப்பு

**கொழும்பு, ஓக. 12**
**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து ரணில் விலகிவிட்டார் என்று நேற்றுமுன்தினம் தகவல்கள் வெளிவந்திருந்த நிலையில், கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பில் இருந்து ரணில் விலகும் தீர்மானம் எட்டப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**
**இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:**

ஐக்கிய தேசியக் கட்சிக்குப் புதிய தலைமைத்துவமொன்று அவசிமாகும் என்று சுட்டிக்காட்டியிருக்கும் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னர் தீர்மானத்தை அறிவிப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித்தலைவர்களுக்கு இடையிலான கூட்டம் நேற்று திங்கட்கிழமை (நேற்று முன்தினம்) கட்சித்தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் புதிய தலைமைத்துவமொன்று அவசியம் என்பது குறித்து கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னர், கட்சியின் அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் இதுபற்றி அறிவிப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ம)

# தம்பதியினர் போன்று நடித்துக்காட்டி நகை திருட முற்பட்டவர்கள் கைது!

சாவகச்சேரி, ஓக. 12
தங்க நகைகள் விற்பனை நிலையத்தில் நகை வாங்கும் தம்பதியர்போல வந்து நகை திருட்டில் ஈடுபட்ட இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர். இந்த இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது ஆணை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், பெண்ணை எச்சரிக்கை செய்து விடுவித்துள்ளார்.
சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள தங்க நகைகள் விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் நகை கொள்வனவு செய்யப் போவதாக இருவர் வந்துள்ளனர். அவர்களின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட வர்த்தகர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். அங்குவந்த பொலிஸாரைக் கண்டதும் அங்கிருந்து இருவரும் நழுவ முற்பட்ட வேளையில் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.
திருகோணமலையைச் சேர்ந்த அவர்கள், திருட்டுக்களின்போது தம்மை தம்பதியினர் போன்று வெளிப்படுத்தி வந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. பெண்ணின் கைப் கைப்பைக்குள் இருந்து தங்க நகைகள் சில மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம- 9)

# மேலும் 29 பேர் நலம் பெற்றனர்

கொழும்பு, ஓக. 12
கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த மேலும் 29 பேர் நலம் பெற்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இதனையடுத்து, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 622ஆக அதிகரித்துள்ளது. தற்போது, 238 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (ம)

# புதிய எம். பிக்களுக்கு மூன்று நாள் பயிற்சி!

கொழும்பு, ஓக. 12
நாடாளுமன்றத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்காக மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற சிறப்புரிமை, நாடாளுமன்ற வரலாறு, நிலையியல் கட்டளைச் சட்டங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்புகள் சம்பந்தமாக புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த கருத்தரங்கின் மூலம் விளக்க உள்ளதாக நாடாளுமன்ற பிரதிச் செயலர் நீல் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடர் ஆரம்பமானதும் பயிற்சி கருத்தரங்குகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்முறை தேர்தலில் நாடாளுமன்றத்திற்கு 60 புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தேசிய பட்டியல் ஊடாகவும் பல புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
**இதனடிப்படையில் இம்முறை நாடாளுமன்றத்தில் 78 புதிய உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள் என நாடாளுமன்ற பிரதி செயலாளர் மேலும் தெரிவித்தார். (ம)**

# முன்னணியின் வேட்பாளருக்கு வாள் வெட்டு!

*அம்பாறையில் சம்பவம்*

அம்பாறை, ஓக 12
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் கோகுலராஜ் மீது நேற்றுக் காலை வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் வன்னியில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இணைப்பாளர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளார்கள்.
தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்து வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை கிழக்கில் ஒடுக்கும் நடவடிக்கையில் சிங்களப் படையினருடன் சேர்ந்தியங்கும் கருணா குழு செயற்படத் தொடங்கியுள்ளது. தேர்தலின் பின்னர் முடிவுகள் அறிவிக்கப்பட்டு தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றி ஒன்று வடக்கினையும் மற்றது கிழக்கினையும் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றம் செல்லவுள்ள நிலையில் அடக்கு முறையின் வெளிப்பாடாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது என்றும் இணைப்பாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ப-19)

# அதிகரிக்கும் முட்டை விலை

## பேக்கரி உற்பத்தியாளர் பாதிப்பு

**கொழும்பு, ஓக.12**
**சந்தையில் முட்டை விலை தொடர்ந்து அதிகரித்து செல்வதன் காரணமாகச் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம் என பேக்கரி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

சந்தையில் முட்டையொன்றின் விலை 22 ரூபாவாக அதிகரித்து உள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பேக்கரி உற்பத்திக்காக அதிளவான முட்டைகள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக சந்தையில் முட்டைக்கான நிர்ணய விலையொன்றை அறிவிக்க வேண்டுமெனவும் அகில இலங்கை பேக்கரிகள் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் என்.கே.ஜயவர்தன கேட்டுக் கொண்டுள்ளார். (ரி1)

## சனிக்கிழமை முதல் கைதிகளை பார்வையிட அனுமதி

கொழும்பு, ஓக.12
எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முதல் கைதிகளைப் பார்வையிடுவதற்கு பார்வையாளர்களை அனுமதிக்க சிறைச்சாலை திணைக்களம் முடிவு செய்துள்ளது.

கடுமையான சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், கைதிகளின் நெருங்கிய உறவினருக்கு மாத்திரமே கைதிகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஒரு கைதி யைப் பார்வையிடுவதற்கு வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே உறவினர் அனுமதிக் கப்படுவர். உறவினர்கள் கைதிகளுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்க முடியாது, அதேநேரத்தில் சுகாதாரப் பொருள்களை மட்டும் வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)



## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.12
உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட போர் 12 ரக ரவைகளை பயன்படுத்தக் கூடிய வகையிலான துப்பாக்கியுடன் நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் பெலியத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஹம்பாந்தோட்டை காணி ஆணையாளர் அலுவலகத்தில் சாரதியாக கடமையாற்றும் நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தம்முல்ல வீரகெட்டிய வீதியில் அமைந்துள்ள அவரின் வீட்டின் மேல் மாடியில் உள்ள படுக்கை அறையில் துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப் பற்றப்பட்டுள்ளது. (ரி1)

## டிராக்டர் விபத்தில் சிறுமி உயிரிழப்பு

அக்கரைப்பற்று, ஓக.12
அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆளங்குளம் வீதியில், உழவு இயந்திரம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 8 வயதுச் சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

உழவு இயந்திரம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது. (ரி2)

## தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 118 பேர் சொந்த இடங்களுக்கு

கொழும்பு, ஓக.12
தனிமைப்படுத்தலை நிறைவு செய்த மேலும் 118 பேர் நேற்று தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து, அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

அதன்படி கல்கந்தை தனிமைப் படுத்தல் நிலையத்திலிருந்து 112 பேரும், மீயாங்கு ளம் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து நால்வரும், புனானை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து இருவரும் வெளியேற்றப்படவுள்ளனர்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து இது வரை 29,757 பேர் தனிமைப் படுத்தல் காலத்தை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர் என்றும், இராணுவத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் 39 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3,449 பேர் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர் என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது. (ரி3)



## கற்றல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு

கரணவாய், ஓக.12
வடமராட்சி கல்வி வலயத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கை நிலையத்தால் மாணவரின் நலன்கருதி தயாரிக்கப்பட்ட கற்றல் இறுவட்டு நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது. வலயக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தலைமையில் வலய மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப்பணிப்பாளர் சி.உதயகுமார் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.ஸ்ரீ மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுவட்டின் வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழக கல்வியியற் றுறை விரிவுரையாளர் ஐ.விஜயபாஸ்கரன் நிகழ்த்தினார். இறுவட்டை வலயக்கல்விப் பணிப்பாளர் வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினர் பெற்றுக்கொண்டார். (ரி1-108)





# புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடமைகளைப் பொறுப்பேற்றார்

கொழும்பு.ஓக.12
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட, மஹிந்த ராஜபக் ஷ அலரிமாளிகையில் நேற்று முற்பகல் கடமைகளைப் பொறுப்பேற்றார். அலரி மாளிகையில் அரச மரத்தடியில் சமய வழிபாட்டில் ஈடுபட்ட பிரதமர், பிரதான மண்டபத்தில் பிரித் பாராயணத்துடன் கடமைகளைப் பொறுப்பேற்றார். வித்யோதய பிரிவேனாதிபதி தலைமை சங்கநாயக்கர் கலாநிதி பலாங்கொட சோபித நாயக்க தேரர் உள்ளிட்ட தேரர்களால் வழிபாடு நடத்தப்பட்டது.

தொடர்ந்து இந்து, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மத வழிபாடுகள் இடம் பெற்றன.

பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக் ஷ இம்முறை பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு 5 இலட்சத்து 27 ஆயிரத்து 364 விருப்பு வாக்குகளைப் பெற்றார்.

நாட்டின் வரலாற்றில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் என்ற சாதனையை நிகழ்த்தி, நாடாளுமன்றுக்குத் தெரிவாகினார். 1970 ஆம் ஆண்டு இளைய நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த, இரண்டு முறை ஜனாதிபதியாகவும், மூன்று முறை பிரதமராகவும் சேவையாற்றியுள்ளார். மஹிந்த 50 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில், ஒன்பது பொதுத்தேர்தல்களிலும், மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் போட்டியிட்டுள்ளார் என்று அவரது ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக சுப்பிரமணிய குருக்கள் ராஜலக்சுமி நேற்றுமுன்தினம் தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். இக் கல்லூரியின் அதிபராக இருந்த கௌரி சேதுராசா ஓய்வுபெற்றுச் சென்று நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வல்வை மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்த செல்வி சுப்பிரமணியக்குருக்கள் ராஜலக்சுமி இக் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். (ரி3-108)

# சஜித்துடன் பேசத் தயார்



## ருவான் விஜேவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.12

ஐக்கிய தேசியக் கட்சி என்ற வகையில் மீண்டும் இணைவது தொடர்பாக சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் விரும்பினால், பேச்சு நடத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

களனியில் வைத்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அவர்களுடனும் பேச்சு நடத்திப் பார்ப்போம். எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அவர்கள் இணையும் தேவை இருக்குமாயின் பேச்சு நடத்திப் பார்ப்போம்.

எனினும் எங்களுக்குத் தற்போது அப்படியான அழைப்புகள் விடுக்கப்படவில்லை. நாங்களும் பேச்சு நடத்தச் செல்லவில்லை. எதிர்காலத்தில் நாட்டுக்காக அப்படியான பேச்சு அவசியம் என்றால் நாங்கள் முன் வருவோம். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. செயற்குழு மாத்திரமல்லாது கட்சியில் உள்ள சகல உறுப்பினர்களும் இணங்கி, கட்சியின் தலைவர் பதவியை வழங்கினால், அதனை ஏற்று கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஐ)

# இராஜகோபுர குடமுழுக்கு

கோண்டாவில், ஒக்.12

கோண்டாவில் வடக்கு அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவ பூதவராயர் ஆலய இராஜகோபுர குடமுழுக்கு எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.10 மணி தொடக்கம் 7.05 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# சிறப்புச் சொற்பொழிவு

சிறுப்பிட்டி, ஓக.12

யாழ்ப்பாணம் நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு தினமும் சிறப்புச்சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான அலங்காரத் திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றுவருகிறது. அதன்படி இன்று புதன்கிழமை சிவநெறிச்செம்மல் இளம் சைவப்புலவர் த.மனோஜ்குமார் " கிராமிய வழிபாட்டில் நாகதம்பிரான் " என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புதிய அரசாங்கத்தில் பாகுபாடு கிடையாது

## *நம்புகிறாராம் ரிஷாத்*

கொழும்பு, ஓக.12

ஜனாதிபதி கோத்தாபய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அரசாங்கம் அனைத்து இன மதங்களைச் சேர்ந்த மக்களுக்கு பேதம் பாராட்டாது சேவையாற்றும் என்று நம்புவதாக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டமைக்கு ரிசாத் பதியூதீன் தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

# கொரோனா 2,875

கொழும்பு, ஓக. 12

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 875 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் நான்கு பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட நான்கு பேரும் ஐக்கிய அரபு நாட்டில் இருந்து வருகைதந்து தனிமைப்படுத்தப்பட்டவர்கள் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மேலும் 29 பேர் குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் 242 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ஒ,5)




## அழகா வருக அருளை தருக

நல்லையழகா அழகும் நீயே
அருளும் நீயே தெளிவும் நீயே
நான். வணங்கும் நல்லவனும் நீயே

வேலழகும் நீயே விழியழகும் நீயே
சொல்லழகும் நீயே
நான் வணங்கும் தமிழ்ச் செல்வனும் நீயே

சுடரும் நீயே சுவையும் நீயே
வேலழகும் நீயே
நான் வணங்கும் ஆண்டியும் நீயே

வண்ணமயிலழகும் வள்ளிவிழியழகும்
அருளழகும் நீயே
நான் வணங்கும் வள்ளலும் நீயே

அழகா வருவாய்
அருளை அள்ளி தருவாய்...

எஸ்.கலாமணி
08ஆம் வட்டாரம், மண்டைதீவு

## குருவாய் வருவாய் குகனே!

வினை நீக்கி எனைக் காக்க விரைந்தோடி வாராய்
-நல்லூர்
வேலவனே நின்பாத மலரொன்று தாராய்
(வினை)

மனை தோறும் நின் கருணை மலர் கோடி சொரியும்- இம்
மாநிலத்தில் நின்கீர்த்தி வானாக விரியும்
(வினை)

நினைவெல்லாம் நின்நாமம் தேனாக நிறையும்- உன்
நிகரில்லா அருளாலே குறையாவும் மறையும்
உனையன்றி துணேயேது எனையாள வருவாய்- என்
உளமெங்கும் இருள்நீக்கி அருளும் நற்குருவாய்
(வினை)

இணையில்லா நின்பாத கமலங்கள் போற்றும்- நல்
இதயங்கள் நல்லூரில் இறைதீபம் ஏற்றும்
அணையாத ஒளியாக உலகேழும் ஒளிரும்- உன்
அருள்தானே தமிழ்த் தாயின் புகழாக மிளிரும்
(வினை)

ஆனையூர்க் கவிராயர்




நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலய 18ஆம் நாள் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. முருகன் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.

# சுன்னாகம் சிவபூதராயருக்கு இன்று அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 12

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (து)



## விதிமுறை மீறி சாரத்தியம் 2, 60 லட்சம் ரூபா தண்டம்



சாவகச்சேரி ஓக. 12
போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது வானம் செலுத்தினரென இருவருக்கும், மது போதையில் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் மூவருக்கும் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவருக்கும், வாகனத்தில் பிரேக் விளக்கு, சமிக்ஞை விளக்கு, வாகன வரிப் பத்திரம் ஆகியவை இல்லாமல் வாகனம் செலுத்தினர்என்றகுற்றச்சாட்டில் இருவருக்கும் எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். வழக்குகள் நேற்று தனித் தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வாகனத்தைச் செலுத்தியோர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மதுபோதையில் சாரதி அனுமதிப், பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 52 ஆயிரத்து 500 ரூபா வீதமும் , மதுபோதையில் வாகனம். செலுத்திய மூவருக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதமும், சாரதிய அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம். ரூபா வீதமும், பிரேக் விளக்கு, சமிக்ஞை விளக்கு,மற்றும், வாகன வரிப். பத்திரம் ஆகியவை இல்லாமல் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது, (ப-9)

### சமூக இடைவெளியைக் கண்காணிக்க

# மடு பெருவிழாவுக்கு தொண்டர் படை தேவை

**மன்னார், ஓக.12**

**மடு பெருவிழாவில் சுகாதார மற்றும் சமூக இடைவெளியைக் கண்காணிக்க தொண்டர்கள் இணைக்கப்பட வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் கேட்டுக்கொண்டுள்ளார்.**

மன்னார் மறைமாவட்டத்தில் ஆவணி மாதத்துக்கான மருதமடு ஆலய பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் மடு ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மறைமாவட்டத்தில் கடந்த ஆடி மாத மருதமடு பெருவிழாவை நாங்கள் நல்ல முறையில் செய்து முடித்துள்ளோம். இதில் நாங்கள் பல அனுபவங்களையும் பெற்றுள்ளோம். நாட்டில் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் சுகாதார நடைமுறை தொடர்ந்து இருப்பதால் நாங்கள் அவற்றைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். கடந்த ஆடி மாத மடுப் பெருவிழாவில் சுகாதாரத்தை பேணும் முகமாக ஆயிரம் பக்தர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் பக்தர்கள் இங்கு தங்குவதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. இருந்தும் பலர் வந்து ஆலயத்துக்கு வெளியே மரங்களின் கீழ் கூடாரம் அமைத்துத் தங்கி இருந்ததை கவனிக்கக் கூடியதாக இருந்தது. ஆகவே இதைவிட நாம் சுகாதாரத்தைப் பேணிய நிலையில் இங்குள்ள வீடுகளில் குறிப்பிட்ட இரு தினங்களுக்கு மட்டும் தங்கிச் செல்ல அனுமதி வழங்கலாம் என எண்ணியுள்ளோம். ஆனால் இம்முறை நாங்கள் எத்தனை பக்தர்கள் கலந்துகொள்ள முடியும் என்பதை வரையறுக்காது சுகாதாரம் மற்றும் சமூக இடைவெளியைக் கருத்தில் கொண்டு பக்தர்களை அதற்கேற்றவாறு ஆலய வளாகத்துக்குள் அனுமதிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். இவ் ஆலய வளாத்துக்குள் உள் நுழைய எட்டு வாயில்கள் இருக்கின்றன. இவற்றில் எங்கள் பொது சௌக்கிய சுகாதார அதிகாரிகள் இருப்பார்கள், ஆனால் உள்நுழையும்மக்களுக்கு நடைமுறையில் இருக்கும் சுகாதாரத்தை நடைமுறையில் செயல்படுத்த எம்மிடம் இருக்கும் உத்தியோகத்தர்கள் குறைவாக இருப்பதால் தொண்டர்களை இச் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது-என்றார். (ஐ-60)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
09 . 01 . 1954



மறைவு
13 . 07 . 2020

### அமரர் தனலட்சுமி சிவபாதம்

அம்மா அவனி விட்டு விண்ணேகி
ஆனதுவோ திங்கள் ஒன்று
எம்மை உலகில் உயர்த்துவதற்கு – நீ
செம்மண் தரையினிலே பட்டதுயர் எத்தனையோ
மாந்தோப்பு மாரியம்மன் அருளுடனே
மாசிலா பணி செய்துயர்ந்த தாயே
ஊரே உருகுதம்மா தனமே தாயே
உன் மறைவு துயராலே
நீ வந்து எமக்கொரு மகவாய் பிறந்திடம்மா
நாம் உனக்கு நற்பணிகள் செய்வதற்கு

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
19 . 05 . 1949



விண்ணில்
13 . 07 . 2020

### திருமதி சங்கரப்பிள்ளை இராசாத்தி

கற்றுத் தந்தவள் – நீ
பற்று வைத்தவள் – நீ
இனிய சுட்டித்தனங்களை
எமதாக்கியவளும்... நீ
இற்றுவிடா இனிய வாழ்வை எமக்களித்து
அதில் நீ அற்றுப் போனதேன் – அம்மா
குடியிருந்த நாம் தவிக்கின்றோம்
குதூகலிக்க நீயின்றி – நாமோ
நெஞ்சில் வலியுடனும்....
நீங்காத நினைவுகளுடனும்....

இன்று (12.08.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற உள்ள அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறுகேட்டுக்கொள்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

## ஐ.தே.க. தேசியப்பட்டியலில் முன்னாள் சபாநாயகர் கரு?

கொழும்பு, ஓக. 12

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்துள்ள தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஏற்க வேண்டும் என அந்தக் கட்சியினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த கோரிக்கை தொடர்பில் கரு ஜயசூரிய இதுவரை எந்த வித கருத்துக்களையும் தெரிவிக்க வில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரால் இந்தக்கோரிக்கைமுன்வைக்கப்பட்டுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியினாலும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## 222 இலங்கையர் நாடு திரும்பினர்

வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் இரண்டாம் கட்டத்தின் ஒருபகுதியாக 222 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

மூன்று நாடுகளில் இருந்த இலங்கையர்களே நான்கு விசேட விமானங்களில் கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களை வந்தடைந்துள்ளனர்.

கட்டார் ஏர்லைன்ஸ் விமானம் கியூ.ஆர் 668 விமானத்தில், கட்டார் தோஹாவிலிருந்து நேற்று அதிகாலை 1.23 மணியளவில் 42 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

மேலும், ஜேர்மனியில் இருந்து இலங்கைக்குச் சொந்தமான ஏர்லைன்ஸ் விமானம் யு.எல்1506 விமானத்தின் ஊடாக இலங்கையர் ஒருவர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். அத்துடன் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் யு.எல் 1102 விமானத்தில் ஊடாக 178 இலங்கையர்கள் மாலைதீவிலுள்ள மால் விமான நிலையத்திலிருந்து மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இவ்வாறு வருகைதந்த அனைவரும் பி.சி. ஆர்.பரிசோதனை செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப)

# கூட்டமைப்புக்கு மக்கள் பாடம் கற்பித்ததையிட்டு மகிழ்ச்சி

### கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

திருகோணமலை, ஓக.12

**இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்கள், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் முயற்சியைப் பாராட்டுகின்றனர். என்ற வகையில் அமைந்துள்ளன. சர்வதேச சமூகத்தை ஏமாற்றிய கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு இன்று தமிழ் மக்கள் ஒரு பாடம் கற்பித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் - இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் உட்பட பதினைந்து உள்ளூராட்சி மக்கள் பிரதிநிதிகள் இந்த முறை நேரடியாக பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கினார்கள். தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் செய்த பணிகளால் அவர்கள் உண்மையில் ஏமாற்றமடைந்துள்ளனர். அந்த ஆதரவின் காரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் 2015 பொதுத் தேர்தலுடன் ஒப்பிடும்போது பொதுஜன பெரமுனவுக்கு இந்த முறை 30,218 வாக்குகள் பெரும்பான்மை உள்ளது. கடந்த ஆண்டு பொதுத் தேர்தலுடன் ஒப்பிடும்போது இந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 12ஆயிரத்து 324 வாக்குகளை இழந்துள்ளது.

அது மட்டுமல்லாமல், அம்பாறை மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலுடன் ஒப்பிடும்போது இந்த முறை 36ஆயிரத்து 678 வாக்குகள் பொதுஜன பெரமுனவுக்கு சேர்க்கப்பட்டுள்ளன. 20ஆயிரத்து 166 வாக்குகள் தமிழ் வாக்கில் இருந்து பொதுஜன பெரமுனவுக்கு குறைக்கப்பட்டுள்ளன. அப்பாவி மக்களின் வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துக்கொள்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்புக்கு வந்து தங்களை மகிழ்வித்தனர். அவர்கள் மாகாண மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழர்கள் பங்கேற்றதிலிருந்து இந்த வேறுபாடு தெளிவாகிறது. தமிழ் மக்கள் எங்கள் அரசாங்கத்தை எதிர்ப்பதாக கூட்டமைப்பு கூறுகிறது அதன் எம்.பி.க்கள் கூட சர்வதேச சமூகத்துக்கு ஒரு கருத்தை எடுத்துக் கொண்டனர். இன்று, எங்கள் கட்சிக்கு தமிழ் மக்களின் ஆதரவுடன், இந்த பார்வை முட்டாள்தனம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. சர்வதேச சமூகத்தை ஏமாற்றிய கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு இன்று தமிழ் மக்கள் ஒரு பாடம் கற்பித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் - என்றார். (ப)



## இ.போ.ச. பஸ் விபத்து; காயமின்றி தப்பினர் பயணிகள்!!

வவுனியா, ஓக. 11

செட்டிகுளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற இ.போ.ச.சாலைக்குச் சொந்தமான பேருந்து பூவரசன்குளம் பகுதியில் வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மாடு ஒன்று உயிரிழந்தது. பயணிகள் காயமின்றித் தப்பினர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது;

நேற்றுக் காலை செட்டிகுளம் பகுதியிலிருந்து வவுனியாவிற்கு சென்ற இ.போ.ச பஸ் பூவரசன்குளம், சண்முகபுரம் பகுதியில் பயணித்து கொண்டிருந்தபோது திடீரென்று இயந்திரக்கோளாறு ஏற்பட்டு வீதியைவிட்டு விலகியுள்ளது. இதன் போது வீதியோரத்தில் மேய்ந்துகொண்டிருந்த இரண்டு மாடுகளுடன் மோதினது. இந்த விபத்தில் மாடு ஒன்று உயிரிழந்தது. பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பூவரசன்குளப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-110)

# இருதரப்பின் நலன்களையும் வலுப்படுத்தத் தயார்

### இலங்கை தொடர்பில் சீனா அறிவிப்பு

இரண்டு தரப்பினரும் வெற்றிபெறும் வகையில் இரண்டு நாடுகளினதும் மக்களும் நன்மையடையும் வகையிலும் இலங்கையுடனான பாரம்பரிய உறவுகளை வலுப்படுத்த தயாராகவிருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன அரசின் பேச்சாளரான, ஷாவோ லிஜியென் நேற்றுமுன்தினம் சீனாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளமை தொடர்பில் சீனா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், சீனப் பிரதமர் லீ கெக்கியேன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இலங்கையின் புதிய பிரதமரை வாழ்த்தியுள்ளார் என்றும் ஷாவோ லிஜியென் தெரிவித்துள்ளார். (ம)

## போதைப்பொருள் குற்றச்சாட்டில் ஐவர் கைது

கொழும்பு, ஓக. 12

ஹெரோய்ன் போதைப்பொருளை பொதி செய்து கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில், ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் எல்லைக்குட்பட்ட நிந்தவூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஹெரோய்ன் போதைப்பொருள்களைப் பொதி செய்து கொண்டிருப்பதாக நேற்று இரவு சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எச்.ஜயலத்திற்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது. இதற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் ஜனோசன் குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை காரணமாக போதைப்பொருளை பொதி செய்த நிலையில் ஐவர் கைதாகினர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இவ்வாறு கைதானவர்கள் 25 வயது முதல் 30 வயதுடையவர்கள் எனவும் சுமார் 1 கிராமுக்கு அதிகமான பொதி செய்யப்பட்ட போதைப்பொருள் பக்கெட்டுக்களும் மீட்கப்பட்டுள்ளமையுடன் குறித்த போதைப்பொருளை பனடோல் மாத்திரையுடன் கலந்து பொதி செய்து விற்பனை செய்யப்பட்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# அரசாங்கம் தனது வேலைகளை முன்னெடுத்துச் செல்ல ஆதரவு

### மரிக்கார் எம்.பி கூறுகிறார்

அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கியுள்ள மிகப் பெரிய பலத்துக்கு அமைய அரசாங்கம் தனது வேலைகளை முன்னெடுத்துச் செல்லச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மக்கள் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அண்மித்த பலத்தை வழங்கியுள்ளனர். இதனால், நாங்கள் அரசாங்கத்தின் காலைப் பிடித்து இழுப்பதற்கு எதிர்பார்க்கவில்லை. வேலைகளைச் செய்வதற்கு அரசாங்கத்துக்குக் காலத்தை வழங்க விரும்புகிறோம். அரசாங்கம் சரியான வழியில் செல்கிறதா என்பதை அறிய அரசாங்கத்துக்கு காலத்தை வழங்குவோம். கிடைத்துள்ள பலத்தைப் பயன்படுத்தி நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கியும், கொள்ளை, ஊழல் மோசடிகளை நோக்கியும் கொண்டு சென்றால், முதல் நாளிலேயே நாங்கள் வீதியில் இறங்குவோம். நாட்டுக்குச் சிறந்த வேலைத்திட்டங்களை முன்வைத்தால் நாங்கள் ஆதரிப்போம் - என்றார். (ப)

# ஐ.தே.க. தலைமைத்துவம் இன்று தீர்மானிக்கப்படும்!

**கொழும்பு, ஓக. 12**
**ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைமைத்துவம் தொடர்பில் இன்று தீர்க்கமான முடிவொன்று எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

ஐக்கியதேசியக்கட்சியின்தலைமைப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க விலகியுள்ள நிலையில், அந்தக் கட்சியின் அடுத்த தலைமைத்துவத்துக்கு தயா கமகே, அகில விராஜ் காரியவசம், ரவி கருணாநாயக்க மற்றும் வஜிர அபேவர்தன ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்படுகின்றன. இந்த நிலையில் கட்சியின் அடுத்த தலைமைத்துவம் தொடர்பில் இன்று தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சிக்கான புதிய தலைமைத்துவத்தை நியமித்ததன் பின்னரே தேசிய பட்டியல் தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் என கட்சியின் பொதுச் செயலர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (ம)

# நிபந்தனைகளின்றி அரசுக்கு ஆதரவு

## மஹிந்த அமரவீர எம்.பி.தெரிவிப்பு



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எவ்வித நிபந்தனைகளும் இன்றி ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது எமக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்களால் வழங்கப்பட்ட பொறுப்புகளை நாம் உரிய முறையில் நிறைவேற்றியதால் எமக்குத் தகுந்த பொறுப்புக்கள் வழங்கப்படும் என்று நம்புகின்றோம். நாம் இங்கு கட்சி ரீதியில் பிரிந்து செயற்படுவதை விட நாட்டை ஸ்திரப்படுத்துவதிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஞாயிற்றுக்கிழமை கூடி சில தீர்மானங்களை எடுத்துள்ளோம். அதன் போது எவ்வித நிபந்தனைகளும் இன்றி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நாட்டை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதனை நாம் அமைச்சுக்கள் அல்லது பதவிகள் வழங்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப் போவதில்லை. நாட்டை முன்னேற்ற வேண்டியது எமது தேவையாகும். எனவே பதவிகளை விட வெற்றிகரமான வேலைத்திட்டங்களுக்கான ஒத்துழைப்பே அவசியமாகும். மக்கள் அதற்கேற்ற வகையில் தூய்மையான குழுவுக்குப் பலத்தை வழங்கியுள்ளனர். ஜனாதிபதியும் பிரதமரும் சிறந்த முறையில் சிந்தித்து ஆற்றல் மிக்கவர்களிடம் பொறுப்புக்களைக் கையளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். மக்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாவிட்டாலும் எம்மால் இயன்றவற்றை ஆட்சிக் காலத்தில் முன்னெடுப்போம் - என்றார். (ப)



# மைத்திரிக்கும் அமைச்சு பதவி

கொழும்பு, ஓக.12
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், மஹிந்த அமரவீர மற்றும் நிமல் சிறிபாலடி சில்வா ஆகியோருக்கும் புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மைத்திரிபால சிறிசேன இரண்டு அமைச்சுப் பதவிகளுக்கு பரிசீலிக்கப்படுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களின் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் குறித்து இன்னும் இறுதி செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று 12அம் திகதி வரலாற்று முக்கியத்துவமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்திலுள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர். இந்நிலையில், புதிய அரசாங்கத்தின் அமைச்சர்களின் எண்ணிக்கை, துறைகள், ஒதுக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல்நேற்று வெளியிடப்பட்டிருந்தது. (ப)

# முன்னாள் அமைச்சரின் மகனை கைதுசெய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 12
முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வாவைக் கைது செய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
மேர்வின் சில்வாவின் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக பிரபல வர்த்தகர் ஒருவரிடம் பணம் கோரி தொந்தரவு செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் மாலக்க சில்வா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பிலேயே தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் தலங்கம பொலிஸார் நேற்று முன்தினம் மாலக்க சில்வாவை கைது செய்வதற்காக அவரது வீட்டுக்கு சென்றிருந்தவேளை அவர் வீட்டில் இருக்கவில்லையென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

# இன, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதுதான் ஐ.ம.ச.!

## அதன் தலைவர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 12
இன, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதுதான் ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறு தெரிவித்தார் அதன் தலைவரான சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய மக்கள் சக்தியானது, இரண்டு மூன்று பேர்களுடன் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்துகொண்டு நாட்டு மக்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் கட்சியல்ல. ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு தீர்மானமும் கலந்துரையாடல்கள் மூலம் அனைவரும் இணைந்து மேற்கொள்ளும் வழிமுறையை எந்நாளும் பின்பற்றும். அத்துடன், எமது கட்சியில் இனம் மதம் உள்ளிட்ட வேறுபாடுகளுக்கு இடமில்லை. மாகாணசபைத்தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருகின்றது - என்றார். (ம)

# பஸிலை பிரதமராக்க அரசு முயற்சி

## கூறுகின்றார் குமார வெல்கம எம்.பி.

கொழும்பு, ஓக.12
முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்து, அவரைப் பிரதமராக நியமிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

20ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து அதற்கான வழியை ஏற்படுத்திக் கொள்வார்கள் என எதிர்வு கூறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் வெற்றியின் பின்னர் களுத்துறையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை தேர்தலில் வாக்கு எண்ணும் போது பல பிரச்சினைகள் ஏற்பட்டன எனவும், ஒரு நாள் இரவு முழுவதும் வாக்குப் பெட்டிகளை வைத்திருந்தது சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் குமார வெல்கம மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# ஹரேந்திர டி சில்வாவை விசாரிக்க ஆணைக்குழு


## அவசியம் என்கிறது மருத்துவ சம்மேளனம்

கொழும்பு, ஓக.12
இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர டி சில்வாவின் அத்துமீறிய நடவடிக்கைகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்வதற்காக ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துரைத்த அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனச்செயலாளர் ஷெனால் பெர்னாண்டோ இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தமக்கு நெருங்கியவர்களைப் பதவிகளில் அமர்த்தி இலங்கை மருத்துவ சபைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக பெர்னான்டோ குறிப்பிட்டுள்ளார். இலங்கை மருத்துவ சபை, மருத்துவர்களின் தரங்களை உறுதி செய்யும் அரச நிறுவனமாகும். எனினும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஐந்து பேரைக்கொண்ட அதிகாரசபையை அமைத்து இலங்கை மருத்துவ சபையின் பதிவு, சர்வதேச அங்கீகாரத்துக்குப் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளார் என ஷெனால் பெர்னான்டோ குற்றம் சுமத்தியுள்ளார். எனவே முன்னாள் அமைச்சின் நெருங்கியவர்களை இலங்கை மருத்துவ சபையில் இருந்து விலக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனத்தின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ப)

## குருதிக்கொடை முகாம்



கொடிகாமம், ஒக. 12
எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளியில் காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது.
மூளாய் இந்து இளைஞர் மன்றம் மற்றும் காங்கேசன்துறை மாவட்ட திரிசாரணர் குழு ஆகியவை இணைந்து இந்த குருதிக்கொடை முகாமை ஏற்பாடு செய்துள்ளன. குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-159)

## 27 முன்னாள் எம்.பிக்கள் ஓய்வூதியத்தை இழந்தனர்

கொழும்பு, ஓக. 12
2015 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்களில் 27 உறுப்பினர்கள் அவர்களுக்கான ஓய்வூதியத்தை இழந்துள்ளனர்.
நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தொடர்ச்சியாக 5 வருட காலம் பூர்த்தி செய்யாதவர்களே இவ்வாறு ஓய்வூதியத்தை இழந்துள்ளனர். நாடாளுமன்றத்தில் ஓய்வூதியம் பெறுவதற்கு, உறுப்பினர் ஒருவர் தொடர்ந்து 5 வருடங்கள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்க வேண்டும்.
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் வாக்குகள் மற்றும் தேசியப்பட்டியல் மூலம் புதிய உறுப்பினர்களாக பலர் தெரிவாகிய நிலையில், அவர்கள் 4 வருடங்களும் 8 மாதங்களுமே நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாகச் செயற்பட்டனர். இவர்களால் தொடர்ச்சியாக 5 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பூரணப்படுத்த முழுமைப்படுத்த முடியாமல் போயுள்ளது. 5 வருடங்கள் முழுமையாக நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டவர்களுக்கு உறுப்பினர் பதவியின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதி ஓய்வூதியமாகக் கிடைக்கும். அவ்வாறு ஓய்வூதியம் இழந்தவர்களில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் 20 பேரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் மூவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மூவரும், மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் ஒருவரும் ஓய்வூதியம் பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இம்மாத இறுதியில் கழகங்களுக்கிடையில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 12
பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவை இம்மாதம் நடத்த பிரதேச செயலகங்களினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கொரோனாத் தொற்றுக்கு முன்னர் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இவ்வருட விளையாட்டு விழாவின் குழு நிலைப் போட்டிகள் பிரதேச செயலகங்களால் நடத்தப்பட்டன.
விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்த வேளையில் கொரோனாத் தொற்றுத் தாக்கம் ஏற்பட்டதால் அவை இடைநிறுத்தப்பட்டன.
மாவட்ட மற்றும் மாகாண மட்ட விளையாட்டு விழாக்கள் நடத்த வேண்டியிருப்பதால் சுகாதார இடைவெளிகளைப் பின்பற்றி விளையாட்டுகளை நடத்தி முடிக்குமாறு விளையாட்டுத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இம்மாத இறுதிக்குள் போட்டிகளை நடத்த பிரதேச செயலகங்களது விளையாட்டு அலுவலர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

# மன்னார் பறங்கியாற்றில் சட்டவிரோத மணல் அகழ்வு

**மன்னார், ஒக.12**
**மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவில் உள்ள பறங்கியாற்றில் தொடர்ந்தும் சட்ட விரோத மணல் அகழ்வு இடம் பெறுகிறது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.**

அனுமதி பெற்ற இடத்தை விட்டு விட்டு வேறு இடங்களில் மணல் அகழ்வை மேற்கொள்கின்றனர் என்றும், பொலிஸார் இந்தச் செயற்பாட்டைக் கண்டு கொள்வதில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;
இவ்வாறு இடம்பெறும், சட்ட விரோத மணல் அகழ்வால் குடி தண்ணீர்க் கிணறுகள் உவர் நீராவதுடன் மணல் அரிப்பைத் தடுத்து நின்ற பெரிய மரங்கள் பல சாய்க்கப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு முப்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் இந்தச் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றன. இதனால் வீதிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அது இனி வரப்போகும் மழைக் காலங்களில் பொது மக்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். எனவே உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து இந்தச் சட்ட விரோத மணல் அகழ்வை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். (ப-213)



# ரஸ்யப் பிரஜை மன்னாரில் கைது.

## தனிமைப்படுத்தலுக்கும் உத்தரவு



மன்னார், ஒக.12
ரஷ்ய நாட்டுப் பிஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காலாவதியான விசாவுடன் சட்ட விரோதமாக தங்கியிருந்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.
தலைமன்னார் கடற்படையினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.
பொலிஸ் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ்பெல்டானோ முன்னிலையில் குறித்த ரஷ்யப் பிரஜை முற்படுத்தப்பட்டார்.
விசாரணைகளை மேற்கொண்ட பதில் நீதிவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.
ரஷ்ய பிரஜைக்கு கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் அவர் தலைமன்னார் பொலிஸாரின் பாதுகாப்பில் தனிமைபடுத்தி வைக்கப்பட்டுள்ளார். (ப-56)

# வவுனியாவின் முதல் குருவான ஜே.பி.தேவராஜா உயிரிழந்தார்

## இன்று இறுதி அஞ்சலி



மன்னார், ஒக. 12
வவுனியா மாவட்டத்தின் முதல் குருவும் இறுதிக்காலம்வரை மன்னார் மறைமாவட்டத்தில் தனது குருத்துவப் பணி மற்றும் சமூகப் பணிகளை மேற்கொண்டு வந்தவருமான அருட்பணி ஜோசப் பெனடிக்ற் தேவராஜா அடிகளார் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில், உயிரிழந்த இவரின் பூதவுடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ் மறைமாவட்ட ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு யாழ் ஆயரின் இரங்கல் திருப்பலியுடன் அங்கிருந்து மாலை மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்துக்கு எடுத்துவரப்பட்டு ஆயர் இல்ல சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அருட்தந்தையின் பூதவுடலின் இறுதி அஞ்சலி இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெறவுள்ளது.
கடந்த ஜீன் மாதம் 16 ஆம் திகதியன்று தனது 90ஆவது அகவையை யாழ் மறைமாவட்ட ஆயர் தலைமையில் யாழிலும் பின்னர் மன்னார் மறைமாட்ட ஆயர் குருக்கள் மத்தியில் மடு ஆலயத்திலும் வெகு விமரிசையாக கொண்டாடிய அருட்பணி ஜே.பி.தேவராஜா அடிகளார் 04.02.1957 ஆம் ஆண்டு அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். 04.02.1982 ஆம் திகதியன்று தனது குருத்துவ வாழ்வின் வெள்ளி விழாவையும் 04.02.2007 பொன் விழாவையும் 04.02.2017 அன்று வைர விழாவையும் சந்தித்த நிலையிலேயே அருட்பணியாளர் தனது 90 ஆவது வயதில் தனது மண்ணுலக வாழ்விலிருந்து விடை பெற்றுள்ளார். அருட்பணியாளர் ஜே.பி.தேவராஜ அடிகளார் ஒரு சரித்திர புருஷர் என பலராலும் வர்ணிக்கப்பட்டவர்.
இவர் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் மட்டுமல்ல கடுமையான யுத்த சூழ்நிலையில் இடம்பெயர்ந்த மற்றும் விரட்டப்பட்ட மக்கள் மத்தியில் தனக்கென தனித்துவமான மதிப்பைப் பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-60)



# ஓலைக் குடிசை

## தீப் பொறியால் நிர்மூலம்

*தேநீர் தயாரிக்க முற்பட்டபோது சம்பவம்*

பளை, ஓக.12
சிறப்புத் தேவையுடைய இளைஞர் தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பு எரித்த போது அதிலிருந்து பறந்த தீப்பொறி ஓலைக் கொட்டில் வீட்டையே முழுமையாக எரித்து சாம்பலாக்கியது.
இந்தச் சம்பவம் பளை இந்திராபுரத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.
அந்த வீடு தீ பற்றி எரிவதைக்கண்ட அயலவர்கள் தீயை அணைக்கச் சென்றபோது சிறப்புத் தேவையுடைய இளைஞர் வீட்டுக்குள் சிக்கித் தவித்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பாட்டார். எனினும், வீடும் வீட்டிலிருந்த உடைமைகளும் முற்றாக எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.
தாயாரும் சகோதரியும் சிகிச்சைக்காக வல்வெட்டித்துறைக்குச் சென்றிருந்தனர். அந்த நேரம் வீட்டில் தனியே இருந்த சிறப்புத் தேவையுடைய இளைஞன் தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பில் தீ மூட்டியிருந்த நிலையில், வீடு தீப்பற்றியது என்று தெரிவிக்கப்பட்டது. (சு-9)

# தாஜுதீனுக்கு நீதி கிட்டாது

## அவரது குடும்பம் அதிருப்தி

ரக்பி வீரர் வாசிம் தாஜுதீன் கொலை தொடர்பில் நீதிக்கான நம்பிக்கையை நாம் இழந்து விட்டோம் என்று அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.
சடலம் தோண்டியெடுக்கப்பட்டு புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஐந்து வருடங்கள் முடிவடைந்துள்ளன. இது தொடர்பில் தாஜுதீனின் தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:
வாசிமின் உடல் தோண்டியெடுக்கப்பட்டபோது எமது குடும்பத்தினரின் இதயங்கள் உடைந்துபோயின. அவருடைய மரணத்துக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே சடலத்தை தோண்டுவதற்கு நாம் அனுமதித்தோம். எனினும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்று அற்றுப்போயுள்ளது - என்று குறிப்பிட்டுள்ளார்.
2012ஆம் ஆண்டு மே 12ஆம் திகதியன்று வாசிம் தாஜுதீன் தமது காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது கொல்லப்பட்டார். முன்னதாக அவரின் மரணம் விபத்தினால் ஏற்பட்டது என்று நம்பப்பட்டது. எனினும் தகவல்கள் வெளியானபோது அது கொலை என்பது தெரியவந்தது. இந்தநிலையில் வாசிமின் கொலையில் நீதியைப் பெற்றுத் தருவதாக முன்னைய அரசு உறுதியளித்திருந்த போதும் அது நிறைவேற்றப்படவில்லை. (ம)

# பிள்ளையானுக்கு அமைச்சுப் பதவி

கொழும்பு, ஓக. 12
முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரான சிவனேசதுரை சந்திரகாந்தனை அமைச்சர் பதவியை ஏற்குமாறும் இன்று பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
பிள்ளையானுக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் பிள்ளையானுக்கு என்ன பதவி வழங்கப்படும் என்பது குறித்து எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. பிள்ளையான் சிறையிலிருந்தபடி பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள நிலையிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நீண்ட அரசியல் பயணத்தில் நம்பிக்கையோடு நகர்வோம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முஸ்லிம் ஆதரவாளர் வட்டம் அறிக்கை

**கொழும்பு, ஓக. 12**

**சமூகங்களுக்கு இடையிலான ஒரு நீண்ட அரசியல் பயணத்தில் புதிய அத்தியாயத்திலே நம்பிக்கையோடு முன்னோக்கி நகர்வோம் என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முஸ்லிம் ஆதரவாளர் வட்டம்.**
**இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:**

வடக்கு, கிழக்கு உள்ளடங்கலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. சிறுபான்மைக் கட்சிகள் சார்பிலே தமிழ்பேசும் மக்கள் சார்பிலே நாடாளுமன்றத்தைப்பிரதிநிதித்துவப் படுத்தும் பெரிய கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே திகழப்போகின்றது என்பது திண்ணம். இந்த நாட்டின் சிறுபான்மை மக்களது உரிமைகளுக்காகவும், அவர்களுக்கான நீதிக்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் குரல்கொடுக்கும் என்பது இங்கு எமக்கிருக்கும் ஒரே நம்பிக்கையும் எதிர்பார்ப்புமாகும்.
இருந்தபோதிலும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி தொடர்பிலே சகோதர சமூகமாக எமது ஒரு சில அவதானங்களை இங்கு பகிர்ந்துகொள்வது சிறப்பானதாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்.
ஓர் அரசியல் அணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் எதிர்பார்த்த 20 ஆசனங்கள் என்ற எண்ணிக்கையை அடையாவிட்டாலும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கணிசமான வெற்றியைத் தமதாக்கியிருக்கின்றமை வரவேற்கப்படவேண்டியதே. இருந்தபோதிலும் மேற்படி பின்னடைவுக்கான காரணிகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆழமான மீள்வாசிப் புக்களை மேற்கொள்வது சிறப்பானதாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம். தமிழ்த் தேசியப் போராட்டத்தை அறவழியில் முன்னகர்த்துதல், பிரிபடாத ஒரு நாட்டுக்குள்ளேயே சிறுபான்மை மக்களுக்கான அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல், பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களில் மக்கள் நம்பிக்கையோடு அணிதிரளும் ஒரு சூழ்நிலை உருவாக்கப்படுதல் அவசியமாகும்.
சமூகங்களுக்கு இடையிலான ஒரு நீண்ட அரசியல் பயணத்தில் ஒரு புதிய அத்தியாயத்திலே நம்பிக்கையோடு முன்னோக்கி நகர்வோம் - என்றுள்ளது. (ம)

# தமிழ்க் கூட்டமைப்பு கலைக்கப்படவேண்டும்

## கூறுகின்றார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், ஓக. 12
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருட்டுத்தனமாக உருவாக்கப்பட்ட கட்சி என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார். அதனால் கூட்டமைப்பு உடனடியாகக் கலைக்கப்படவேண்டும் எனறும் அவர் தெரிவித்தார்.



யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருட்டுத்தனமான வழியிலேயே உருவாக்கப்பட்டது. அந்தக் கட்சிக்கு தேர்தல் ஆணைக்குழுவில் பதிவுகூட இல்லை. தற்போதைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலைக்கப்பட வேண்டும். ஏனெனில் தந்தை செல்வா இறந்து பல வருடங்களின் பின்னரே மாவை சேனாதிராசா அந்தக் கட்சியைப் பொறுப்பேற்றார். அதற்கு யாரும் அனுமதி கூட வழங்கவில்லை. மாறாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த சு.ப. தமிழ்ச்செல்வன் அனுமதி வழங்கியேகட்சியின்பொறுப்பை சேனாதிராசா ஏற்றுக் கொண்டார்.
இவ்வாறு அனைத்தும் திருட்டுத்தனமாகவே நடைபெற்றன. சேனாதிராசா, சம்பந்தன் மற்றும் சுமந்திரன் தவிர்ந்த அனைத்து தரப்புக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைய முன்வரவேண்டும். பலமானஓர் கூட்டை உருவாக்க வேண்டும். அதற்காகவே வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரனை கட்சியின் பொறுப்பை ஏற்குமாறு அழைப்பு விடுத்திருந்தேன். எனினும் அவர் இன்றுவரை முன்வரவில்லை - என்றார். (சு-20)


# கட்சிச் செயலரான தேரர் காணாமல் போய்விட்டார்

கொழும்பு, ஓக. 12
அபே ஜன பலவேகய கட்சியின் பொதுச்செயலாளர் வேதனிய விமல திஸ்ஸ தேரர் காணாமல் போயுள்ளார். இதனால்தான் தேசிய பட்டியல் விவகாரத்தில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று அந்தக்கட்சியின் உறுப்பினர் ஆனந்த சாகரதேரர் தெரிவித்தார்.
அபேஜனபல வேகய கட்சியின் பொதுச்செயலாளர் வேதனிய விமல தேரர் தேர்தலின் பெறுபேறுகள் வெளியான தினத்தில் இருந்து அவர் காணாமல் போயுள்ளார். தொலைபேசியின் ஊடாக அழைப்பு ஏற்படுத்தியபோதும் இதுவரையில் உரிய பதில் கிடைக்கப் பெறவில்லை. அவர் காணாமல் போயுள்ளாரா, அல்லது கடத்தப்பட்டுள்ளரா என்ற சந்தேகம் எமக்கு காணப்படுகிறது.
பொதுஜன பல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
அபே ஜனபல வேகயகட்சி தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நான்கு மாகாணங்களில் இரத்து செய்யப்பட்டன. 17 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்டு சுமார் 67ஆயிரம் வாக்குகளைக் கைப்பற்றியுள்ளோம். எமது கட்சிக்கு தேசிய பட்டியல் ஊடாக ஓர் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆசனத்தை ஞானசார தேரருக்கு வழங்க வேண்டும் என்று கட்சியின் செயற்குழு ஏகமனதாக தீர்மானித்தது.
காணாமல் போயுள்ள பொதுச்செயலாளரை கண்டுபிடிப்பது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும். 14ஆம் திகதிக்கு முன்னர் இவர் கிடைக்காவிடின் கட்சியின் யாப்பிற்கு அமைய நீதிமன்றத்தை நாடி செயற்குழுவின் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்வோம் - என்றார். (த)



# குறுக்கு வழியில் தலைமை தேடும் மூன்றாந்தர அரசியல்





■ செம்பரிதி

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பின்பு ஊடகங்களுக்குப் பேட்டியளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறை ஏற்பட்ட பெரும் பின்னடைவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் செயலூக்கமின்மையே காரணமெனவும், வெகுவிரைவில் தலைமை குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்திருந்தார்.

அவர் இவ்வாறு தெரிவித்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம், சிறீதரன், மக்கள் விரும்பினால் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை தான் ஏற்கத் தயார் எனத் தெரிவித்திருந்தார். கட்சித் தலைமைக்கு வருமளவுக்கு அவர் சிரேஷ்ட உறுப்பினராக இல்லாதபோதிலும் தலைமைப் பதவியை ஏற்கும்படி அவரை எவருமே கோராத நிலையில் அவர் இப்படியான ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் இப்படிக் கருத்து வெளியிட்டதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியைப் பெறுவதற்கு தான் சகல விதத்திலும் ஒத்துழைக்கப் போவதாக தெரிவித்திருந்தார்.

ஒரு தேர்தல் பின்னடைவை அடுத்து தலைமை மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனக் குறிப்பிடுவதும், யாரும் கேட்காமலே தலைமைப்பதவியை ஏற்கத்த தயார் என்று கூறுவதும் அப்படித் தலைமைப் பதவி ஏற்பதற்கு இன்னொருவர் தான் சகல ஒத்துழைப்புகளையும் வழங்கப் போவதாக கூறுவதும் தமிழரசுக்கட்சியின் அதிகாரத்தை தமது கைக்குள் கொண்டு வர சிலர் மேற்கொள்ளும் திட்டமிட்ட நயவஞ்சகச் சதி நடவடிக்கைகள் என்றே கருதவேண்டியுள்ளது. ஏற்கனவே கடந்த காலத்தில் சுமந்திரனின் விடுதலைப் புலிகளுக்கு விரோதமான கொள்கைகளுக்கும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் எதிரான கருத்தையே சிறீதரன் கொண்டிருந்தார் என்பது சகலரும் அறிந்த விடயமாகும். ஆனால் தேர்தலுக்கு சில மாதங்கள் முன்பு திடீரென சிறீதரனின் தொனி தலைகீழாக மாற ஆரம்பித்தது. 2010ம் ஆண்டில் தேசியப் பட்டியல் உறுப்பினராக சம்பந்தனால் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்று அரசியலுக்குள் உட்புகுந்த சுமந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் சர்வதேச ரீதியில் விடுதலை அரசியலை உலகம் வியக்கும் வண்ணம் முன்கொண்டுசென்ற ஒப்பற்ற இராஜதந்திரியான அன்ரன் பாலசிங்கத்துக்கு நிகரானவரென்று கூறி சிறீதரன் தனது சுமந்திர விசுவாசத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

சிவஞானம் சிறீதரனின் இத்தகைய தலைகீழ் மாற்றம் பலருக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்திய போதிலும் சுமந்திரனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியைப் பெறுவதென்றும் சிறீதரனுக்கு தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை பெறுவதென்றும் அதற்கேற்ற வகையில் அரசியல் நடவடிக்கைகளை இருவரும் ஒருங்கிணைந்து நகர்த்துவதெனவும் இருவருக்குமிடையே ஒரு இரகசிய உடன்பாடு எட்டப்பட்டதாக சமூக வலைத்தளங்களில் பரவலாக கருத்துகள் வெளிவந்தன.

எனவே இன்று சிறீதரனின் தலைமையேற்கத் தயார் என்ற கருத்தும், சுமந்திரன் அதற்கு ஒத்துழைக்கத் தயார் என்று கூறப்பட்ட கருத்தும் ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கைகளின் வெளிப்பாடென்றே கருதவேண்டியுள்ளது.

ஒரு அரசியல் கட்சியின் தலைமை என்பது அக்கட்சியின் நன்மை தீமைகளில் ஒன்றிணைந்து நீண்ட காலம் பாடுபட்டு, அந்த அனுபவத்தின் அடிப்படையிலும் பெற்றுக் கொண்ட அரசியல் அறிவின் அடிப்படையிலும் பெற்றுக்கொள்வதாகும். ஆனால் துரதிஸ்டவசமாக தமிழர் அரசியலில் தொண்டர்கள் தொண்டர்களாகவே இருக்க, தமிழ்த் தேசிய அரசியல் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்படாமலிருந்த கனவான்கள் முக்கிய பதவிகளைப் பெற்றுக்கொள்வது கடந்த காலத்தின் அனுபவமாகும். அவ்வகையில் அமரர் அமிர்தலிங்கத்தின் சக வழக்கறிஞர் என்ற வகையில் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படும் வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது திரு.வி.ஆனந்தசங்கரி ஒத்துழைக்க மறுத்ததால் சம்பந்தன் அதன் தலைவராகும் வாய்ப்பும் கிடைத்தது. திரு. சம்பந்தன் அவர்கள், தான் எவ்வாறு குறுக்கு வழியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை கைப்பற்றினாரோ அவ்வாறே கொழும்பின் உல்லாசவாசியான சுமந்திரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளிறக்கி அவரை ஒரு ஆதிக்க சக்தியாக மாற்றினார். அதேவேளையில் மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக நீண்டகாலமாக தமிழரசுக் கட்சியில் அர்ப்பணிப்பும் தியாகமும் நிறைந்த தொண்டராக பணியாற்றிய மாவை. சேனாதிராசாவை புறமொதுக்கிவிட்டு கொழும்பிலிருந்து முன்னாள் நீதியரசரான சீ.வி.விக்கினேஸ்வரன் அவர்களை இறக்குமதி செய்தார் திரு சம்பந்தன் அவர்கள் இவ்வாறே சாதாரண மட்டத்தினரை புறமொதுக்குவதி லும் தீவிர தேசிய உணர்வாளர்களையும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களையும் தலையெடுக்காமல் பார்ப்பதிலும் சம்பந்தன் சுமந்திரன் போன்றோர் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வந்தனர். சாதாரண மட்டத்திலிருந்து வந்த சிறீதரன் விலைபேசப்பட்டு சம்பந்தன், சுமந்திரன் மட்டத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

சிறு வயதில் இருந்தே அரசியலில் ஈடுபட்டு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பதினொரு தடவை சிறை சென்றமை உட்பட பல தியாகங்களின் ஊடாக நீண்ட காலத்தின் பின் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு வந்த மாவை. சேனாதிராசாவை அகற்றிவிட்டு அவரின் இடத்துக்கு சிறீதரனை கொண்டுவரும் முயற்சிகள் எவ்வளவு அபத்தமானவை என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள். சிறீதரனைப் பொறுத்தவரையில் எந்தக் காலத்திலும் ஒரு அரசியல்வாதியாக வளர்ந்தவரென்று கூறமுடியாது. ஒரு ஆசிரியராகவும் ஒரு அதிபராகவும் பதவிவகித்த இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப் பாவித்து, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் ஒத்துழைப்புடனேயே நாடாளுமன்ற அரசியலில் உட்புகுந்தார். அதற்கு முன்பாக இவருக்கு அரசியல் அனுபவம் வாய்த்திருந்ததென்றோ, அல்லது விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிணைந்து செயற்பட்டு இன்னல்களை அனுபவித்தவரென்றோ சொல்லிவிட முடியாது. மாவை. சேனாதிராசா 2010ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் வசிக்கும் வேறொருவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கவிருந்த சந்தர்ப்பத்தில் சுரேஸ் பிரேமச்சந்திரன் எடுத்த முயற்சியின் காரணமாகவே இவருக்கு வேட்பாளர் நியமனம் கிடைத்தது. ஆனால் இவர் சில காலத்தின் பின் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு எதிராக செயற்பட்டாரென்பதும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினர் தன்னைக் கொண்டு சென்று சித்திரவதை செய்தனரெனப் பகிரங்க மேடையில் உரையாற்றியதும் இவரின் ஏறிவந்த ஏணியை காலால் உதைத்துத் தள்ளும் பண்பை வெளிப்படுத்துகிறது. அது கூட சுமந்திரனைத் திருப்திப்படுத்த மேற்கொள்ளப்பட்ட கேவலமான நடவடிக்கைகளில் ஒன்றாக இருக்கலாம். அதுமட்டுமின்றி 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலின்போது தான் 75 கள்ள வாக்குகளை போட்டதாக பகிரங்கமாகவே சொல்லி அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரு வெற்றி முறையற்றதென்ற வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவர் விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கேணல் திலீபனின் மைத்துனர் என்ற தகுதியை பாவித்தே அதிக வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆனால் புலிநீக்க அரசியலையே கொள்கையாக கொண்டிருக்கும் சுமந்திரனின் கைப்பொம்மையாக மாறி இன்று தலைமைப்பதவிக்காக கையேந்தி நிற்கிறார்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக பல்லாண்டு காலமாக எத்தனையோ தியாகங்களுடனும், அர்ப்பணிப்புகளுடனும் அரசியல் களத்தில் நடைபயின்ற தந்தை செல்வா, அமரர் வன்னிய சிங்கம் போன்றவர்களால் தலைமை தாங்கப்பட்டு வரலாறு படைத்த தமிழரசுக் கட்சிக்கு தலைமை தாங்கும் தலைமை தங்களுடைய முன்னேற்றத்தை மட்டும் இலக்காகக் கொண்டு அதற்காக தன்மானமுட்பட எதையுமே விற்கத் தயங்காத சுமந்திரன், சிறீதரன் பொன்றோருக்கு உள்ளதா? உரிமைப் போராட்ட பாரம்பரியமுள்ள ஒரு கட்சிக்கு அதனால் தலைமை தாங்கப்படும் ஒரு கூட்டமைப்புக்கு தலைவர்களாவதானால் அதற்கமைவான கொள்கைப் பற்றும் எதையும் இழக்கத் தயாரான தியாக உணர்வும் ஆழ்ந்த அரசியல் அனுபவமும் இருக்க வேண்டும். ஆனால் அவர்களைத் தூக்கியெறிந்து விட்டு பதவி ஆசைக்காக எதிரிகளிடம் கூட விலைபோகக் கூடியவர்கள் குறுக்கு வழியில் தலைமையைக் கைப்பற்ற எடுக்கும் முயற்சிகளை தமிழ் மக்கள் நிச்சயமாகத் தகர்த்தெறிவார்கள்.

# தமிழ்க் கூட்டமைப்பினர் ஏக பிரதிநிதிகள் அல்லர்



*பஸில் திட்டவட்டம்*

கொழும்பு, ஓக. 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் அல்லர். எனவே, தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு நாம் தயாரில்லை. எந்தவொரு நிபந்தனைகளையும் ஏற்கவும் மாட்டோம் என்று திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளார் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான பஸில் ராஜபக்ச.

சிங்கள தொலைக்காட்சியொன்றில் நேற்று இரவு ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிபந்தனை அடிப்படையில் எம்முடன் அரசியல் நடத்த முடியாது.

கூட்டமைப்பின் நிபந்தனைகளையும் ஏற்கமாட்டோம். யாழ்ப்பாணத்துக்கு 24 மணிநேரமும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. யாழ். தேவியை ராஜபக்ச அரசாங்கமே தலைமன்னார்வரை கொண்டு சென்றது. ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சியையே கூட்டமைப்பு ஆதரித்தது. ஐ.தே.க. ஆட்சியை பாதுகாத்தது. வரவு செலவுத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர். கூட்ட மைப்பினால் முன்வைக்கப் பட்டுள்ள சமஷ்டி உள்ளிட்ட கோரிக்கைகளை ஏற்கமுடியாது. அவர்களுடன் பேச்சு நடத்தவேண்டிய தேவையும் எழவில்லை. முதல்தடவையாக கிழக்கு மாகாணசபைத் தேர்தலில்கூட போட்டியிடவில்லை. அடுத்த முறை நாம் நிச்சயம் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றுவோம். கூட்டமைப்பு ஊடாக அல்ல வடக்கு, கிழக்கில் எம்மால் தனித்து இயங்கி மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளமுடியும்- என்றார். (ஒ,5,44)

# முன்னாள் போராளி மீது தாக்குதல்!

*பணமும் சூறையாடல்*

வவுனியா, ஓக. 12

வவுனியாவில் முன்னாள் போராளி மீது இனந்தெரியாதோர் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் அவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவர் வி.விநோதரன் என்பவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வவுனியா கரப்பன்காட்டு பகுதியில் அமைந்துள்ள தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் அலுவலகத்துக்குள் நேற்று இரவு உள்நுழைந்த இனந்தெரியாதோர் முன்னாள் போராளி மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியதுடன் அலுவலகத்தில் இருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். தாக்குதல் சம்பவம் தொடர்பில் அயலவர்களால் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த முன்னாள் போராளி நோயாளர் காவு வண்டி மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ,5,110)

# வவுனியா விபத்தில் முதியவர் பரிதாபச் சாவு

வவுனியா, ஓக. 12

வவுனியாவில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் முதியவர் உயிரிழந்துள்ளார். வவுனியா புதிய பஸ் நிலையப்பகுதியினுள் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பஸ் நிலையத்தில் நின்ற இலங்கை போக்குவரத்து சபையின் மாகோ சாலைக்குச் சொந்தமான பஸ் பின் நோக்கி இயக்கப்பட்டபோது முதியவரை மோதித் தள்ளியது.

விபத்தில் முதியவர் படுகாயமடைந்தார். அவர் முச்சக்கர வண்டியில் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (ஒ,5,110)

# மாற்று வியூகத்தால் தமிழரை வென்றோம்

*மார்தட்டுகிறார் பஸில் ராஜபக்ஷ*

**கொழும்பு, ஓகஸ்ட் 12**

**ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்ப்பாணத்தில் கிடைத்த வாக்குகளை அடிப்படையாகக் கொண்டால் பொதுத் தேர்தலில் எமது அணிக்கு ஒரு ஆசனம்கூட கிடைத் திருக்காது. எனவே, வியூகம் வகுக்கப்பட்டது. மாற்றுவழி குறித்து மதிநுட்பத்துடன் சிந்தித்தோம், இதன்படி சுதந்தி ரக் கட்சியில் இருந்து அங்கஜனும், ஈ.பி.டி.பியில் இருந்து டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளனர். ஆக எமது அணிக்கு இரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.**

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுனர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். சிங்கள தொலைக்காட்சியொன்றில் நேற்றுமுன்தினம் இரவு ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலின்போது வடக்கு, கிழக்கில் எமது அணிக்கு தோல்வி ஏற்பட்டது. அந்தத் தேர்தலின்போது கிடைத்த வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிட்டால் பொதுத் தேர்தலில் எமது அணிக்கு 5 ஆசனங்களே கிடைத்திருக்கவேண்டும். ஆனால் அதனைவிடவும் கூடுதல் ஆசனங்களை பொதுத்தேர்தலில் கைப்பற்றியுள்ளோம்.

ஜனாதிபதி தேர்தலின்போது யாழில் கிடைத்த வாக்குகளை அடிப்படையாகக் கொண்டால் பொதுத்தேர்தலில் எமது அணிக்கு ஒரு ஆசனம்கூட கிடைத்திருக்காது. எனவே, வியூகம் வகுக்கப்பட்டது. மாற்றுவழி குறித்து மதிநுட்பத்துடன் சிந்தித்தோம். இதன்படி சுதந்திரக் கட்சியில் இருந்து அங்கஜனும், ஈ.பி.டி.பியிலிருந்து டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளனர். ஆக எமது அணிக்கு இரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

அதேபோல் வன்னியிலும் இரண்டு ஆசனங்கள் உள்ளன. ஒருவர் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர். மற்றையவர் ஈ.பி.டி.பி. வேட்பாளர். அடுத்ததாக மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் எமக்கு ஓர் ஆசனமே கிடைத்திருக்கவேண்டும். ஆனால் இம்முறை இரண்டு ஆசனங்கள் கிடைத்தன. மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட வியாழேந்திரன் வெற்றிபெற்றார். பிள்ளையானும் 53 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றார். சிறு வாக்கு வித்தியாசத்திலேயே அவரின் கட்சிக்கான தேசியப்பட்டியல் இல்லாமல்போனது. அம்பாறை மாவட்டத்தையும் கைப்பற்றியுள்ளோம். மொட்டுச் சின்னத்தில் மூவரும், தேசிய காங்கிரஸின் அதாவுல்லாவும் வெற்றிபெற்றுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் சிலர் ராஜபக்சக்களை ஏதேனுமொரு காரணத்துக்காக எதிர்க்கின்றனர். மொட்டு சின்னத்தை விரும்பவில்லை. ஆனால் கூட்டமைப்பையும் அவர்கள் எதிர்க்கின்றனர். அரசுடனும் இணைய வேண்டிய தேவை உள்ளது. ஆனாலும் எம்முடன் உடனடியாக நேரில் இணைய முடியாது.

இதன் காரணமாகவே வேறு வழியில் வந்துள்ளனர். விரைவில் வடக்கு, கிழக்கு மக்களும் தேசிய கட்சிகளுடன் இணைந்து தேசிய நீரோட்டத்தில் சங்கமிப்பார்கள் என நம்புகின்றேன், என்றார். (ஓ.5.44)



# உத்தியோகபூர்வமாக காணி ஒப்படைப்பு

வலி.வடக்கு, ஓக. 12

1990ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் இயங்கிய, பொலிஸ் திணைக்களத்துக்குச் சொந்தமான காணி ஒழுங்கமைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக பொலிஸாரிடம் நேற்றுக் காலை கையளிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை மத்தி கிராம அலுவலர் பிரிவில் 1.14 ஏக்கர் காணியே தெல்லிப்பழை பிரதேச செயலரால் பொலிஸாரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (ஒ,5)

# மகனைத் தேடிய தாய் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஓக. 12

இறுதிப் போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடி வந்த தாய் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, விசுவமடுவைச் சேர்ந்த மைக்கல் யேசுமேரி (வயது74) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருடைய மகன் 2009ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட சுழற்சி முறை தொடர் போராட்டங்களிலும் இந்த தாய் கலந்து கொண்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். (ஒ.5)

# எரிபொருளுடன் கப்பல் விபத்து

கொழும்பு, ஓக. 12


இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள மொரீஷியஸ் தீவிற்கு அருகில் ஆயிரம் தொன் எரிபொருளுடன் கப்பல் ஒன்று விபத்துக்குள்ளாகியது. இதனால் இலங்கைக் கடல் எல்லை தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கடல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. இலங்கை கடல் எல்லைகளிலும் இவ்வாறான விபத்துக்கள் நிகழ்வது அதிகம் என அதன் அதிகாரி பேராசிரியர் டர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார். இலங்கை கடல் எல்லைக்கு அருகில் இவ்வாறான விபத்துகள் ஏற்பட்டால் அது நாட்டின் கடல் எல்லைக்கு அச்சுறுத்தலாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கப்பல் விபத்துக்குள்ளானதில் ஆயிரம் தொன் அளவிலான எண்ணெய் கடலில் கசிந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அதற்கமைய இலங்கை மிக அவதானத்துடன் தயாராக இருப்பது அவசியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# முல்லை மருத்துவமனையில் மருத்துவர் பற்றாக்குறை

## நிவர்த்தி செய்யுமாறு கோரி மக்கள் போராட்டம்

**முல்லைத்தீவு, ஓக. 12**
**முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நிலவும் மருத்துவர்கள் பற்றாக்குறையை நீக்கக் கோரி மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் அடையாள பணிப்புறக்கணிப்பை நேற்று மேற்கொண்டனர்.**




முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மிக நீண்ட நாள்களாக நிலவி வரும் மருத்துவர் பற்றாக்குறையை போக்கக் கோரி உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் கோரியும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கப்பெறாதநிலையில் மாவட்ட மருத்துவமனை மருத்துவர்கள் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ளக பயிற்சியை நிறைவு செய்து நியமனத்துக்காக காத்திருக்கும் மருத்துவர்களை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு விடுவிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணித்தும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர்களை விடுவிக்கவில்லை. இதன் காரணமாக அடையாள பணிப்புறக்கணிப்பு இன்று முன்னெடுக்கப்பட்டுள் ளது. பணிப் புறக்கணிப்பு காரணமாக மருத்துவமனைக்குச் சென்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். மாவட்ட மருத்துவமனையில் நிலவும் தொடர் மருத்துவ பற்றாக்குறை காரணமாக மாதாந்த சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் வெளிநோயாளர்கள் என்று பெருமளவானவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர். (ஒ,5,19)

## 19ஐ நீக்கினாலும் ஜனாதிபதியின் பதவி காலத்தில் மாற்றம் வராது!

கொழும்பு, ஓக. 12
அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்பட மாட்டாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு நாட்டு மக்களின் அனுமதி கிடைத்துள்ளது. மக்களின் ஒத்துழைப்புடன் அதற்கான பணிகள் சுயாதீனமாக இடம்பெறும். அதற்கு முன்னர் அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படும். ஏனெனில் அதில் பல குறைபாடுகள் உள்ளன.
19ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 வருடங்களாக இருந்தது. 19மூலம் அது ஐந்து வருடங்களாக குறைக்கப்பட்டது. 19ஐ நீக்கினால் பழைய நிலைமை திரும்பும். ஆனாலும் 5 வருடங்கள் பதவியில் இருப்பதற்குத்தான் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதில் மாற்றம் செய்யக்கூடாது என ஜனாதிபதி அறிவித்துவிட்டார். எனவே, ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படாது.
அத்துடன், அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி பதவியை நபரொருவர் இரண்டு தடவைகள் மாத்திரமே வகிக்கலாம் என்ற வரையறை மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு மக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.
எனவே, இரண்டு தடவைகள் என்ற நிலைமை உருவாக்கப்படும்- என்றார். (ஒ,5,44)

## சர்வதேச கண்காணிப்பாளர்களின் அவசியத்தை உணர்த்தியது தேர்தல்

### *வவுனியா பிரஜைகள் குழு தெரிவிப்பு*

வவுனியா, ஓக.12
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல், சர்வதேச கண்காணிப்பாளர்களின் அவசியத்தை உணர்த்தியுள்ளது என்று வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
கடந்த காலங்களில், இலங்கைத் தீவில் முக்கிய வழக்குகளின் நீதிமன்றத் தீர்ப்புகளை இறுதி நேரத்தில் வரும் தொலைபேசி அழைப்புகள் மாற்றி அமைத்துள்ளதாக குற்றச்சாட்டுகள் உண்டு. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தனது ஆட்சிக் காலத்தில் நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்கு உட்படுத்தும், அதைச் சந்தேகிக்கும் வகையில் இருட்டு மூலைகளில் நடந்தேறிய இவ்வாறான சூட்சும விசயங்களை பொதுத்தளத்தில் பேசு பொருளாக்கியிருந்தார். அவர் கடுமையாக குற்றம் சுமத்திய ராஜபக்ஷ தரப்பினரே இப்போது மறுபடியும் இலங்கைத்தீவில் ஆட்சிபீடம் ஏறி உள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது. உள்நாட்டு நீதி பரிபாலனக் கட்டமைப்பை போன்றே சிறீலங்கா அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்கள், விசாரணைக்குழுக்கள் உள்ளிட்ட இதர அரச கட்டமைப்புகளிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்தே இருக்கிறார்கள்.
கடந்த 2015 நாடாளுமன்றத் தேர்தலைப் போன்றே இம்முறை 2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆளும் அரச அதிகார மையம், சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கான நெருக்கடிகள் தலையீடுகளிலிருந்து தம்மைப் பாதுகாத்து உள்நாட்டுப் பொறிமுறைகளைச் செயற்படுத்துவதற்கு, வழக்குத் தொடுநர்களாகிய பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பில் இருந்தே தமக்கு ஒத்திசைந்து போகக் கூடியவர்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தேர்தல் முடிவுகள் மாற்றி அமைக்கப்பட்டன என மக்கள் அச்சமும் சந்தேகமும் கொண்டுள்ளனர். ,
இது உண்மையாகவே ஜனநாயக முறைப்படி நடந்த தேர்தல் தானா? என்ற பலத்த சந்தேகத்தை கிளப்புகிறது. ஆகவே தான் 2020 நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்களின் பங்களிப்பின் அவசியத்தையும் தேவையையும் உணர்த்தி நிற்கிறது. சிறிலங்கா அரச அதிகார மையம் தீர்மானம் எடுக்கும் தமிழ் மக்களின் வாழ்வுரிமை சார்ந்த விவகாரங்களில் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தமிழ் மக்கள் உண்மை மற்றும் நீதியைக் கண்டறியவும் சர்வதேச தலையீடுகள் அத்தியாவசியமானது என்றும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு நம்புவதோடு இதனை மக்கள் மன்றத்திலும் பிரேரிக்கிறது என்றுள்ளது. (ப)

## ஆசிரியையின் சங்கிலி நடுவீதியில் அறுப்பு

### *பொலிஸில் முறைப்பாடு*

கொடிகாமம், ஓக. 12
தென்மராட்சி வரணிப் பகுதியில் வீதியால் பயணித்த ஆசிரியர் ஒருவரின் கழுத்திலிருந்த சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம், பிற்பகல் வரணி வைத்தியசாலைக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.
இந்தப் பெண், ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார் எனவும், நேற்றுமுன்தினம் தனது கடமை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அறுக்கப்பட்ட சங்கிலி சுமார் 2 பவுண் எனவும் தெரிய வருகிறது. (ப-159)

## அரசியல் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டோருக்காக கூட்டமைப்புப் போராடும்

### செல்வம் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், ஓக 12

அரசியல் கைதிகளின் விடுதலையை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடாப்பிடியாக போராடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
அப்பாவித் தமிழ் இளைஞர்கள் இருபது வருடங்களுக்கு மேலாக விசாரணைகள் எதுவும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள், அவர்கள் விடுவிக்கப்பட்ட வேண்டும். அதே போல் இறுதி யுத்தத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியான தீர்வு வேண்டும். அத்துடன் தமிழர் தாயகப் பகுதிகளில் உச்ச கட்ட அபிவிருத்தி போன்ற விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக கரிசணையுடன் செயற்படும். இந்த அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருந்தாலும் எமது கோரிக்கைகளுக்கான நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை தேசியத்தை முன்னிறுத்தி வெற்றி பெற்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்த அரசுக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுப்போம்- என்றார். (ப213)

## மாநகரசபை ஊழியர்கள் சுகவீன விடுப்பு போராட்டம்

கொழும்பு, ஓக. 12
குருநாகல் மாநகரசபையின் சகல ஊழியர்களும் கடமைக்கு சமுகமளிக்காத நிலையில் மாநகரசபையின் செயற்பாடுகள் முழுமையாக நேற்றுத் தேக்கமடைந்தன.
குருநாகல் மாநகரசபையின் உயர் அதிகாரி முதல் கடைநிலை ஊழியர் வரையான சகலரும் சுகயீன விடுமுறை அறிவித்துள்ளனர்.
இதன் காரணமாக, நகர தூய்மைப்படுத்தல், குப்பை சேகரிப்பு, தீயணைப்பு பிரிவு உள்ளிட்ட மாநாகர சபையால் வழங்கப்படும் சகல சேவைகளும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
அத்துடன், குருநாகல் பொதுச் சந்தை மற்றும் பொதுநூலகம் என்பன மூடப்பட்டிருந்த நிலையில், வர்த்தகர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து, முற்பகல் 11 மணிக்கு சந்தை திறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

# மெழுகுவர்த்தி விற்பனை வீழ்ச்சி

## உதவுமாறு உற்பத்தியாளர் கோரிக்கை

மன்னார், ஓக.12

மடுப்பிரதேசத்துக்கு உட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் சுயதொழில் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மெழுகு வர்த்திகளை, விற்பனை செய்ய உதவுமாறு மெழுகுவர்த்தி உற்பத்தியாளரான செல்லையா ரத்தி னம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளியிடங்களிலிருந்து வரும் மெழுகு வியாபாரிகளினால் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் சுய தொழில் மூலம் உற்பத்தி செய்யப் படுகின்ற மெழுகு வர்த்திகளின் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக் கப்படுகின்றன என சுயதொழில் முயற்சியாளர் மேலும் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெரிய பண்டிவிரிச்சான் கிராமத்தில் வாழ்வாதாரத்துக்காக கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக சிறிய அச்சின் மூலம் மெழுகுவர்த்தி களை உற்பத்தி செய்து பொலித் தீன் பைகளில் போட்டு உந்துருளி யின் மூலம் மன்னார் மாவட்டம் முழுவதும் சென்று வியாபாரம் செய்தேன்.

தற்போது, பல சிரமங்களுக்கு மத் தியில் பிரதேச செயலகத்தில் பதிவு செய்து மெழுகுவர்த்திகளை வியா பார தரத்துடன் பொதி செய்து வியா பார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறேன்.

மெழுகு தட்டுப்பாடுகள் ஒரு புறம் இருந்தாலும் தென்னி லங்கை மற்றும் பெரிய வியாபாரி கள் கிராமப்புறங்களில் உள்ள கடைகளுக்கு நேரில் சென்று நீண்டகால கடனடிப்படையில் மெழுகுவர்த்திகளை விற்பனை செய்துவருகின்றனர்.

மாவட்டத்தில் உள்ள பெரிய மற் றும் சிறிய வியாபாரிகள் வெளியி டத்து வியாபாரிகளிடமே மெழுகுதி ரிகளைப் பெறுகின்றார்கள். இத னால் எனது சிறு கைத்தொழில் வியாபாரம் மற்றும் வாழ்வாதார மும் பாதிக்கப்படுகிறது.

என்வே மன்னார் மாவட்டத்தில் உள்ள பெரிய மற்றும் சிறிய வியா பார நிலைய உரிமையாளர்கள் உள்ளூர் உற்பத்தி மற்றும் சுய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் அவர்க ளின் வாழ்வாதாரத்தைக் கருத் தில் கொண்டு எமது உள்ளூர் தயாரிப்பான மெழுகுதிரிகளை கொள்வனவு செய்து எமது சுய தொழில் முயற்சி வெற்றி பெற உதவி செய்ய வேண்டும் - என் றார். (ரி2-213)



# இன்றைய நாள்



**மேடம்:** நிம்மதி அளிக்கும் நாள். நீண்ட நாளாக இழுத்து வந்த சுபபலன் உண்டாகும். அலுவலகப் பணிகளை மன திருப்தியுடன் செய்வீர்கள். புகழ் பெற்றவர்களின் அறிமுகம் கிடைக்கும். பணப்புழக்கம் நன்றாக இருக்கும்.



**இடபம்:** கலைத்துறையினருக்கு மகிழ்ச்சியான நாள். புத்தி சாதுரியம் அதிகரிக்கும். வியாபாரிகள் புதிய வாய்ப்புகளைப் பெறுவர். பணியா ளர்களுக்கு மகிழ்ச்சி தரும் திருப்பங்கள் ஏற்படும். பழைய முதலீடு லாபமாகும்.



**மிதுனம்:** உங்கள் வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும் நாள். பெற்றோரின் பாராட்டுக் கிடைக்கும். பல காலம் தெரி யாத ரகசியங்கள் தெரிய வரும். முடிக்க வேண்டியவை சுலபமாக முடியும்.



**கடகம்:** இயல்பான நாள். குடும்பத்தி னர் கோபத்தை தூண்டலாம். கனி வாக பேசி பணியிடத்தில் வெற்றி பெறு வீர்கள். நண்பர்கள் இடையே வருத் தம் ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தி னருடன் மகிழ்ச்சிகரமாக நேரம் செல்லும்.



**சிம்மம்:** கூடுதலாக பணியாற்ற வேண்டி வரும் நாள். வியாபாரத்தில் ஆர்டர்கள் கிடைக்கப் பாடுபட வேண்டி இருக்கும். பணம் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.



**கன்னி:** இக்கட்டான நாள். யாரையும் நம்பி ரகசியங்களைச் சொல்ல வேண் டாம். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நீங்களே செய்வது நலம். தீய நட்பை விட்டு விலகுங்கள்.



**துலாம்:** கவனமான நாள். எதிலும் விழிப்புடன் செயல்படுவது நல்லது. வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை சந்திப்பீர்கள். மற்றவர்களுடன் உங் களை ஒப்பிட்டு மனம் புழுங்குவீர்கள்.



**விருச்சிகம்:** சீரான நாள். விமர்ச னங் களை ஏற்றுப் புன்னகைப்பீர்கள். பணி யிடத்தில் செயல் திறமையைப் பாராட் டுக் கிடைக்கும். கலைஞர்கள் புதிய வாய்ப்பை பெறுவர்.



**தனுசு:** மகிழ்ச்சியான நாள். வாய்ப்புக்கு காத்திருந்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. சகோதர வகையில் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கும். குழந்தைப் பேறு மகிழ்ச்சி தரும்.



**மகரம்:** நிம்மதியான நாள். கலைத்துறை யினருக்கு சுமாரான வாய்ப்புகள் வரும். சிரமங்களுக்கு இடையே பணியாற்ற வேண்டிய சூழல் உருவாகும். குடும்பத்தி னர் ஒத்துழைப்பார்கள்.



**கும்பம்:** சந்தோஷமான நாள். பணிச் சுமை அதிகரிக்கும். ஊதியம் போதாது என்ற எண்ணம் மேலோங்கும். சோம்ப லினால் முயற்சிகள் குறையும்.



**மீனம்:** பொறுப்பு கூடும் நாள். கலைத் துறையில் எதிர்ப்புகள் விலகும். உறவினர் மத்தியில் உங்களின் செல்வாக்கு உயரும். சிலமனக்குறைகள் முடிவுக்கு வரும்.

# நாட்டின் புதிய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது

## பௌத்த பீடங்களின் மஹாசங்கத்தினர் ஆசீர்வதிப்பு

கொழும்பு, ஓக.12

ஜனாதிபதியும், பிரதமரும் எதிர்பார்த்தபடி அவர்களுக்கு நாட்டு மக்களின் ஆணை கிடைத்துள்ளது என மூன்று பௌத்த பீடங்களின் மஹாசங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு ஆசி வழங்கி அமரபுர, அஸ்கிரிய, ராமன்ய ஆகிய பௌத்தபீடங்களின் பௌத்த பிக்குகள் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் இறையாண்மைக்காக மக்கள் நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆணையை வழங்கியுள்ளனர்.

அறிவு, உளவுத்துறை மற்றும் ஒருமைப்பாடு உள்ளவர்கள் நாடாளு மன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவசியம் தேர்தல் பிரசாரத்தின் போது ஒவ்வொரு அரசியல் கட்டத்திலும் பேசப்பட்டது. ஜனாதிபதியினால் ஆரம் பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டம் நிறைவேறும் என்ற எதிர்பார்ப்புடன் ஜனாதி பதியும், பிரதமரும் எதிர்பார்த்தபடி அவர்களுக்கு நாட்டு மக்களின் ஆணை கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ் நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயி லாக 20 நாள்க ளுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பதின்மூன்றாவது நாளாகிய இன்று புதன்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாணம் நாட்டிய கலாகேந்திராவின் இயக்குநர் கலாநிதி கிருசாந்தி இரவீந்திரா "இலங்கைத் தமிழர் ஆடல் கலை மரபு" என்ற பொரு ளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல் லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச் சங்கத்தினர் தெ ரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996

pass word : wts

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக் கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** மாமடுவிலிருந்து பொகஸ் வேவ வரை, பத்தினியார்மகிழங்குளம் கிராமம், மகாகச்சக் கொடிய கிராமம், நெளுக்குளத்திலிருந்து இராஜேந்திரகுளம் வரை, கூமாங்குளத்திலிருந்து அவுசதப்பிட்டிய வரை, கல்லு டைக்கும் ஆலை, ஆண்டியப்புளியங்குளம், வாரிக்குட்டியூர் 04ம் வட்டாரம் ஆகிய இடங்களிலும், **மன்னார் மாவட்டத்தில்** உயிலங்குளம், கள்ளிக்கட்டைக்காடு, முதலைக்குத்தி, வட்டுப்பித்தன்மடு, புதுக்காமம், கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள் ளார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை

கொழும்பு, ஓக.12

நிட்டம்புவ எகொடவத்தபொகோடகம பிரதேசத்தில் தொடகடவெல வயல் நிலத்திற்கு அருகே ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கி கொலை செய் யப்பட்டுள்ளார். இரு குழுக்களுக்கு இடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த நபரின் சடலம் வயல் நிலத்திற்கு அருகில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய எந்த வொரு சந்தேக நபரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. (ரி1)

# தண்ணீர் பற்றாக்குறையில் உலகில் 400 கோடி மக்கள்

## ஐ.நா. சபை தகவல்



**ஜெனிவா, ஓக.12**
**உலகம் முழுவதும் சுமார் 400 கோடி மக்கள் ஆண்டுக்கு ஒரு மாதமாவது தண்ணீர் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. உலக நாடுகள் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் உலகம் முழுவதும் 5இல் 2 பேர் தண்ணீர் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றனர். 300 கோடி மக்கள் தங்கள் வீடுகளில் தண்ணீர் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். 400 கோடி மக்கள் வருடந்தோறும் ஒரு மாதத்திலாவது கடுமையான தண்ணீர் பற்றாக்குறையைச் சந்திக்கின்றனர். கோடிக்கணக்கான மக்கள் நீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லாமல் இருப்பது மிகப் பெரிய பேரழிவு எனவும் தெரிவித்துள்ளது. (ரி1)



# இலங்கை– மியன்மார் நேரடி விமான சேவை

### *சாத்தியக்கூறுகளை ஆராய இணக்கம் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.12
இலங்கைக்கும், மியன்மாருக்கும் இடையில் நேரடி விமான இணைப்பை ஏற்படுத்துவதற்கான நோக்கத்துடன் மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் நளின் டி சில்வா மியன்மார் எயர்வேஸ் இன்டர்நேஷனலின் உயர் நிர்வாகத்துடன் அண்மையில் ஒரு சந்திப்பை நடத்தியுள்ளார். இதன்மூலம் இரு இடங்களிலும் சுற்றுலாத் தொழில்களை மேம்படுத்த முடியும் எனவும், இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகளின் நேர விரயத்தைக் குறைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வரலாற்று, கலாசார, மத உறவுகளால் ஆதரிக்கப்படும் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையில் கணிசமான அளவு போக்குவரத்துச் சேவை இதனால் நடைபெறுமென மியன்மாருக்கான இலங்கையின் தூதுவர் இதன்போது கூறியுள்ளார்.

இரு நாடுகளின் மத முக்கியத்துவத்திலிருந்து பொருளாதார நன்மைகளைப் பெறும் நோக்கில் கொழும்பு யங்கூன் புத்தகாயா அல்லது கொழும்பு யங்கூன் - காத்மண்டு ஆகியவற்றை இணைக்கக்கூடிய ஒரு விமான சேவையை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவுள்ளோம் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் மியன்மார் எயார்வேஸ் இன்டர்நேஷனலை பிரதிநிதித்துவப்படுத்திய தலைமை நிர்வாக அதிகாரி சரவணன் ராமசாமி மற்றும் தலைமை வணிக அதிகாரி குமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ரி3)

# வாசனைத் திரவிய ஏற்றுமதியை அதிகரிக்க பேச்சுகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.12
நாட்டில் வாசனைத் திரவிய ஏற்றுமதியை அதிகரிப்பதற்குத் தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் மக்கள் வங்கி அதிகாரிகள் வாசனைத் திரவிய உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

தன்னிறைவான நாட்டை உருவாக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், மக்கள் வங்கி கடன் திட்டத்தையும் தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் விவசாயம், கடற்றொழில், பண்ணை வளர்ப்பு, சிறு நெல் ஆலைகள், பால் உற்பத்திப் பொருள்கள் உட்பட பல துறைகள் இதன் மூலம் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)



# லிந்துலை பகுதியில் தீ விபத்து

## 24 குடியிருப்புகள் முற்றாக சேதம்

நுவரெலியா, ஓக.12
லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரக்கலை மத்திய பிரிவில் நேற்று இரவு 10 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 24 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த வீடுகள் முற்றாக சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 24 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம், அவர்களின் உறவினர் மற்றும் அயலவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகம் மற்றும் அக்கரப்பத்தனை பிரதேச சபை ஆகியன இணைந்து வழங்கியுள்ளன.

லிந்துலை பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 3 மணித்தியாலத்தின் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தீவிபத்தில் எவ்வித உயிர் ஆபத்தோ, காயங்களோ ஏற்படாத போதிலும் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளன.

இந்த தீ விபத்து மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள லிந்துலை பொலிஸார், இது தொடர்பான விசாரணைகளை நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர். (ரி3)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.12
தொம்பே சமனபெத்த பிரதான வீதியின் மல்வானை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். மல்வானை பகுதியிலிருந்து வந்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரில் வந்த உந்துருளி ஒன்றுடன் மோதுண்டமையினால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 42 வயதுடைய தாயும் 19 வயதுடைய அவரின் மகளுமே உயிரிழந்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய கார்ச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ரி1)







தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத் திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத் திருவிழா திருப்பலியில் தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரின் புஸ்பராசா, தலைமன்னார் பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ரி3-56)

## மரண அறிவித்தல்



### நாகலெட்சுமி வாமதாசன்

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகலெட்சுமி வாமதாசன் நேற்று (11.08.2020) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

கோ. வாமதாசன்
சிறி அம்பிகை பல்பொருள் வாணிபம்
3ஆம் வட்டாரம் நயினாதீவு

077 125 9993,
077 238 0189

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

### முத்தையா இராசரத்தினம்

(புலவர் முத்து இராசரத்தினம்)

தோற்றம் 01.04.1943 மறைவு 12.07.2020

அவர்களின் வீட்டுக்கிருத் திய நிகழ்வுகள் இன்று (12.08.2020) புதன் கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

54, சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 10 |
| 04 | 08 |
| 1934 | 2020 |

### திரு. தியாகராஜா சுந்தரலிங்கம்

(Retired Suprintedent - Water works Department Malikakanda)

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தியாகராஜா சுந்தரலிங்கம் அவர்கள் (10.08.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, கனகாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இசைஞானி **(Retired Graduate Teacher)** அவர்களின் அன்புக்கணவரும், குருபரன் (கனடா), உமாசுதன் (கொழும்பு), ஆகியோரின் அன்புத்தந்தையும், நிதி (கனடா), கௌசல்யா **(Rupavahini)** ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி மௌனேஸ்வரி, மகேஸ்வரி, **Dr**.வர்ணலிங்கம், கனகலிங்கம், பஞ்சலிங்கம் மற்றும் விநாயகலிங்கம், புஷ்பராணி, தேவிராணி, ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை 12.08.2020 காலை 9.00 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனை தொடர்ந்து காலை 11.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பித்து மதியம் 1.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்: குடும்பத்தினர்

உமாசுதன் – 0777325776
குருபரன் (கனடா) – 001 4166488236
திருமதி பா.ஜெயச்சந்திரன் (Bobby) – 077 6509721
கௌசல்யா – 077 341 9240

## பதினேழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### பொன்னையா பாலசிங்கம்

(Retired Superintendent of Audit

தோற்றம் 19.09.1931

மறைவு 21.08.2003


அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து - எம்மை
அவனியிலே வாழ்வாங்கு வாழவைத்த தந்தையே!
பதினேழாம் ஆண்டு நினைவுத் திதியில் - உம்மை
நினைந்து வணங்குகின்றோம் அப்பா!

166/3, சேர்.பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிவகுரு



தோற்றம் 1950.11.25 மறைவு 2020.08.11

வேல் கோயிலடி இன்பசிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிட மாகவும் கலப்பனாவத்தை தும் பளை பருத்தித்துறையை வசிப் பிடமாகவும் கொண்ட கண பதிப்பிள்ளை சிவகுரு நேற்று (11.08.2020) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந் துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கணபதிப்பிள்ளை பரு வதம் ஆகியோரின் அன்பு மகனும், இராமலிங்கம் பாக்கி யம் அவர்களின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்பு கணவரும், சிவலிங்கம், சிவசாமி, அன்னபூரணி, உருத்திரன், அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராமச்சந்-திரன், இராசநாயகம் ஆகியோரின் மைத்துனரும், ஆனந்த ரூபன், ஆனந்தகுமாரி, ஆனந்தரூபி, ஆனந்தஜெகன், ஆனந்த ஜெசிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைரமுத்து, யோக ராணி, சிவசோதி, மகிழ்னகுமார், பூர்ணிமா ஆகியோரின் அன்பு மாமனாரும், தாருண்யா, மதுராங்கனி, கனிஷியா, கிரிஷாந், எதிஷன், நிதுஷா, கிருஷிகா, கருஷிதன், அக்ஷயா, சிவாணி, சபிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2020) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் தும்பளை பருத்தித்துறையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 400 2902 தகவல்:- குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 | 11 |
| 10 | 08 |
| 1945 | 2020 |

### திருமதி சிவஞானமூர்த்தி தங்கம்மா

கந்தரோடையை பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானமூர்த்தி தங்கம்மா நேற்று (11.08.2020) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - சின்னப் பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிவஞானமூர்த்தியின் அன்பு மனைவியும், கந்தசாமி, சுப்பிரமணியம், ஞானம்,அருளம்மா, சரசு ஆகியோரின் சகோதரியும், தங்கேஸ்வரி, சிவகாமியம்மா, விக்னேஸ்வர ராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசேஸ்வரன், விக்னேஸ்வர குமாரன், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சிந்தா, தெனோதரன், கிருசிந்தா, தர்சிகா, சசிகரன், சுதர்சன், கஜரூபன், பதுசனா, கிருஷாந், ஜெயகாந்தன், தர்ஷன், விஜித்தா ஆகியோரின் பேர்த்தியும் அஸ்வினின் பூட்டியமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2020) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று நீர்வேலி சிவியாக்காட்டு மயானத் தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:- குடும்பத்தினர்

# கசிப்பு உற்பத்தி ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஓக.12

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதே சத்துக்கு உட்பட்ட தேவிபுரம் ஆற்றுப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலை யடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப் பின் போதே இவர் கைது செய்யப் பட்டார்.

இதன்போது கசிப்பு உற்பத்திப் பொருள் களும் கைப்பற்றப்பட்டன. சந்தேகந பரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர். (ஐ-19)



# இருவர் கைது

கொடிகாமம், ஓக.12

சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாக னம் செலுத்தினார் என்ற குற்றச்சாட் டில், ஒருவரும், மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவருமாக இருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மந்துவில், வரணிப் பகுதியைச் சேர்ந்த நபர்களே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இருவரை யும், நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை களை மேற்கொண்டனர். (ப-159)


## காணி வாடகைக்கு தேவை

**K.K.S** வீதியிலும், பலாலி வீதியிலும், யாழ்ப்பாணத்தில் இருந்து **5km** உள்ளேயும் காணிகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 076 8294 100

## வேலையாள் தேவை

நல்லூர் பகுதியில் இயங்கும் பொருட்கள் விநியோக நிறுவனம் ஒன்றுக்கு **Computer** மற்றும் **Account** தெரிந்த பெண் வேலைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:- 071 568 3311

## மணமகள் தேவை

03 இல் சூரியன் செவ்வாய் உள்ள புனர்பூச நட்சத்திர 89ஆம் ஆண்டு ஆண் (V) பட்டதாரி ஆசிரியருக்கும், 04 இல் சூரியன் செவ்வாய் உள்ள ஆண் (V) 87 ஆம் ஆண்டு பிறந்த சொந்தக்கடை உரிமையாளருக்கும் (திருவாதிரை) பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர்.

T.P. viber — 0773976203

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 24 . 07 . 1950

விண்ணில் 13 . 07 . 2020

### அமரர் விசுவலிங்கம் ஜெயரட்ணசிங்கம்

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறி அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்கெடுத்து துயர்பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலமாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள், மருதனாமடம் புற்றுநோயாளர் காப்பக உத்தியோகத்தர்கள் மற்றும் அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரதிகளை அச்சிட்டு வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (12.08.2020) புதன் கிழமை காலை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

30/5, தியேட்டர் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு.

குடும்பத்தினர்.


## ஆற்றில் குதித்தவர் காணாமல்போனார்

கொழும்பு, ஓக. 12

ஆற்றில் குதித்த பெண்ணைக் காப்பாற்றும் நோக்கில் ஆற்றில் குதித்த இளைஞர் தண்ணீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், ஆற்றில் குதித்த பெண்ணை பிரதேசவாசிகள் காப்பாற்றி பாணந்துறை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் பண்டாரகமை பாணந்துறையில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. பண்டாரகமை பிரதேசத்தை சேர்ந்த 29 வயதான இளைஞனே பெண்ணைக் காப்பாற்றும் நோக்கில் ஆற்றில் குதித்து காணாமல் போயுள்ளார்.

இந்த சம்பவம் இன்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பிரதான வீதியிலுள்ள பொல்கொட பாலத்தில் இருந்து பெண் குதித்துள்ளார். அவரைக் காப்பாற்ற முற்பட்டபோதே இளைஞன் காணாமல் போயுள்ளார். (கு)


## மரண அறிவித்தல்



### திருமதி அமிர்தாயனசிவம் அன்னம்மா

பரந்தன் பாம்புக்கமத்தை பிறப்பிடமாகவும். இல.6/1. புறூடி முன் ஒழுங்கை. கச்சேரி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தாயனசிவம் அன்னம்மா கடந்த (10.08.2020) திங்கட்கிழமை இறைவனடி எய்தினார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - ஆழ்வாப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும். காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற அமிர்தாயனசிவம் அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு சகோதரியும். சந்திரகுலராஜா (கனடா). பரமராணி. அன்னராணி. அமிர்தராணி (சுவிஸ்). வரதராஜா (ரஞ்சன் - லண்டன்). விஜயராஜா (சுவிஸ்). சத்தியராஜா (சுவிஸ்). நாகராணி (பாப்பா - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும். அகிலா (கனடா). சிதம்பரநாதன். டோமினிக்சர்வே. உமாதேவன் (சுவிஸ்). செல்வநாயகி (லண்டன்). இந்துமதி (சுவிஸ்). நகுலா (சுவிஸ்). மைக்கல் நெல்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2020) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 2487 015

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 12 . 1935

மறைவு 10 . 08 . 2020

### திருமதி பரமேஸ்வரன் கனகாம்பிகை

10ஆம் வட்டாரம், புங்குடுதீவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரன் கனகாம்பிகை கடந்த (10.08.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரனின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சி தம்பதிகளின் மூத்த மருமகளும், யமுனா (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), தமிழ்ச்செல்வி (பிரான்ஸ்), சரவணபவன் (சுவிஸ்), பங்கையற்செல்வி (சுவிஸ்), பவானி, சரவணசொரூபன் (லண்டன்), தர்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகராஜா, விக்னேஸ்வரன், பாஸ்கரன், மஞ்சுளா தேவி, கோணேஸ்வரன், லிங்கேஸ்வரன், ரதிமலர், பத்மராசா ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் தில்லைமலர், திருநாவுக்கரசு, தெட்சணாமூர்த்தி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிஷ்யன், நிலோஜா, கீர்த்தனா, சக்சனா, விதுஷன், தாட்ஷாயினி, கம்ஷாயினி, நிருஜா, அபிவர்ணா, கவிஷன், அபிசனா, ரோபிகா, ரபிஞ்சனா, அகிசன், நிருஷன், நிருஷிகா, அஸ்விதா, ஜக்சன், ஜக்வீனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கனகையா, ராஜேஸ்வரி, மகாதேவி காலஞ்சென்ற அன்னபூரணி மற்றும் அப்புத்துரை, சண்முகநாதன், மகேஸ்வரன், அருளாம்பிகை, ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான ராசையா, தர்மலிங்கம் மற்றும் சகுந்தலா தேவி, இந்திராதேவி ஆகியோரின் சகலியும் பேரின்பநாதன் (கனடா), வரதலட்சுமி (பிரான்ஸ்), செந்தூரன் (உப தபால் அதிபர் - வல்லன் பிரதேசசபை உறுப்பினர், வேலணை), யாழினி ஆகியோரின் சீனியம்மாவும் லவன், தன்யா, துஷிதா ஆகியோரின் அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2020) புதன்கிழமை காலை 08.00 மணிக்கு 10ஆம் வட்டாரம் புங்குடுதீவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மணல்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.273/4, இராசவீதி,
கோப்பாய் தெற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 03 . 1932

மறைவு 10 . 08 . 2020

### திருமதி மனோன்மணி சேனாதிராஜா

கோண்டாவில் மேற்கைப் (முத்தட்டுமட லேன்) பிறப்பிடமாகவும் கொழும்பு, நியூசிலாந்து (Auckland) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சேனாதிராஜா அவர்கள் 10.08.2020 திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தையா (சுருளி) இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான, செல்லையா அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற செல்லையா சேனாதிராஜா (Mawanella) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார். கலாவதி (Auckland, Newzealand), சிவகுமார் (Wellawatta, Colombo), கலாரூபி (ரஞ்சி) (Kolpitty, Colombo), ரஜனி (Sydney, Australia) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீபத்மநாதன் (Auckland, Newzealand), மல்லிகா (Wellawatta, Colombo), காலஞ் சென்ற திருச்செல்வம் (Ajantha Hotel, Colombo) கௌரிதாசன் (Sydney, Australia) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஜன் பிரணிக்கா (Sydney, Australia), தசிந்தன் அபி (Sydney, Australia), நிமலன் (Auckland, Newzealand), கஜனி (Sydney, Australia), துவாரகா ஜெயரூபன் (Palmerston North, Newzealand), நிருத்திகா விருபன் (Kolpitty, Colombo), ரிஷானி (Sydney, Australia), அனிஷன் (Sydney, Australia), அக்சயா (Wellawatta, Colombo) ஆகியோரின் அன்புப் பேத்தியும், Drea, Heira (Sydney, Australia) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். மற்றும் காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, துரைராஜசிங்கம் (Murunkan), பாலசுந்தரம் (Mawanella). செல்வராணி மற்றும் பூலோக இந்திராணி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான நடராஜா, தேவராஜா, ராஜதுரை மற்றும் மகேஸ்வரி, சந்திரா, பாலசுப்பிரமணியம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நந்தகுமார், சஞ்சீவன், நிரஞ்சன், தனோஜன், அபிராமி ஆகியோரின் அன்பு மாமியும், சசி, சாந்தி, ராஜி, முரளி, வாணி, சாரதா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.08.2020 ஞாயிற்றுக்கிழமை Manukau Memorial Gardens Chapel, 361 Puhinui Road, Papatoetoe Auckland 2025, Newzealand இல் காலை 10 மணி முதல் மதியம் 1.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

S. சிவகுமார் – (Colombo) +94777373314 / Y. ஸ்ரீபத்மநாதன் – (Newzealand) +64211482124
S. கௌரிதாசன் – (Australia) +61408647056 / S. நிரோஜன் – (Australia) +61450534410
S. தசிந்தன் – (Australia) +61431118261 / S. நிமலன் – (Newzealand) +64211482124
S. ஸ்ரீராமநாதன் – (Newzealand) +6421890164

## வீடு வாடகைக்கு

தெல்லிப்பளையில் வீடு வாடகைக்கு உண்டு. தனி அறைகளாகவும் தரப்படும்.

**தொடர்பு:- 077 6287 194**

## கடைகள் வாடகைக்கு

யாழ்/ இந்து மகளீர் கல்லூரிக்கு முன்னால் இருகடைகள் உடன் வாடகைக்கு.

**தொடர்பு:- 077 905 0319**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 40வயது திருமணமாகாத. சொந்தமாக தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.

**தொடர்புகளுக்கு:- 077 905 8615**
**(வைபர், வாட்ஸ்அப்)**

## பெண் அலுவலர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் கல்வி நிறுவனத்திற்கு கணினி அறிவுடைய பெண் அலுவலர் தேவை.

**தொடர்புகளுக்கு:- 077 386 7458**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF ENGINEERING
## WALK - IN – INTERVIEW

Walk in interview for appointment to the following two posts will be held on **17.08.2020 from 9.00 a.m. to 11.00 a.m at the Board room, Faculty of Engineering, University of Jaffna, Ariviyal Nagar, Kilinochchi.**

1. **Post 1: Temporary Research Assistant**
2. **Post 2: Temporary Instructor in Mechanical & Process Engineering / Engineering Mathematics / Civil Engineering / Electrical and Electronic Engineering / Computer Engineering.**

**1. The candidates for Temporary Research Assistant are expected to**

- Helping to identify business requirement of software and automation projects and prepare proposals for projects.
- Helping to design, develop and execute automation activities using Office 365 applications.
- Ability to create detailed, comprehensive and well-structured test plans and test cases.
- Ability to handle basic SQL operations.
- Help to identify, record, document thoroughly and track bugs.
- Assist dean's office for further development.
- Any other direction given by the Dean.

**3. Temporary Instructor in Mechanical & Process Engineering / Engineering Mathematics / Civil Engineering / Electrical and Electronic Engineering / Computer Engineering are expected to**

- work with very cordial academic staff, and perform research and significantly improve their design skills in professional level
- prepare and conduct laboratory experiments
- Assist lecturers to conduct undergraduate programme

**2. Required qualifications for both Categories**

- A UGC recognized Four Year Engineering Degree.
- Candidates, who completed the engineering degree program and awaiting the results of the final examinations, may also apply for the above mentioned posts.

**SALARY SCALE –**

**1. Temporary Research Assistant**
**Rs. 49,860 (Fixed)**

**2. Temporary Instructor**
**Rs. 40,920/- (Fixed)**

Candidates are requested to submit scan copy of the relevant certificates, NIC and **self-prepared applications** (Curriculum vitae) by email to the following email address, judy@eng.jfn.ac.lk. This should be done on or before 4 p.m on 16th August 2020. Any clarification, please contact office phone number 0212060161. When the candidates attend to the interview, they should bring the originals.

**Registrar**
**University of Jaffna**
**11.08.2020**

## பணி நிறைவு வாழ்த்துக்கள்



எமது பாடசாலையில் பணியாற்றி ஓய்வுபெற்ற
திருமதி
**விக்கினேஸ்வரி சிவசுப்பிரமணியம்**
அவர்களின் பணிநிறைவை வாழ்த்துகின்றோம்


Best Wishes Congratulations Best Wishes

**சேவை விபரம்:**

- மு/ ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயம் - 22.11.1989 - 30.01.1995
- யா/ கோப்பாய் ஆசிரியகலாசாலை - 31.01.1995 - 31.12.1996
- யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா.வித் - 01.01.1997 - 10.02.1999
- யா/ சேதுகாவலர் வித்தியாலயம் - 11.02.1999 - 09.02.2010
- யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா.வித் - 10.02.2010 - 01.01.2017
- யா/ கைதடி குருசாமி வித்தியாலயம் - 02.01.2017 - 01.04.2020

ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய
எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
**அதிபர், ஆசிரியர்கள்**
**கைதடி குருசாமி வித்தியாலயம்**

## சேவை நலன் பாராட்டு



Congratulations Congratulations

**சிதம்பரம் தர்மலிங்கம்**

**சேவை விபரம்.**

| | | |
|---|---|---|
| புசல்லாவை C.C..T.V. | - 16.04.1985 | - 23.02.1988 |
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | - 24.02.1988 | - 31.12.1989 |
| கண்டி/ சரஸ்வதி. மகா வித்தியாலயம் | - 01.01.1990 | - 08.01.1995 |
| யா/வரணி மகா வித்தியாலயம் | - 09.01.1995 | - 09.02.1997 |
| யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை | - 10.02.1997 | - 11.05.2011 |
| யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை | - 12.05.2011 | - 19.02.2018 |
| யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை | - 20.02.2018 | - 12.08.2020 |

எமது பாடசாலையில் சிறப்பாகச்சேவையாற்றி இன்று (12.08.2020) ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியரின் சேவையை வாழ்த்துவதுடன் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.*

ஆசிரியர் நலன்புரி சங்கம்
**யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை**

## ES Printers

**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## அரச மற்றும் தனியார் தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாக பெறக்கூடிய கற்கை நெறிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன

- GCE O/L, A/L தகைமை இல்லாத மாணவர்களுக்கு இலங்கை அரசின் NVQ ஊடாக GCE O /L, A/L தகமையினை TVEC யின் NVQ 4 கற்கை நெறியின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.
- O/L, A/L முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தொழில் வாய்ப்பொன்றினை எதிர்பாத்திருக்கும் மாணவர் கள் ஆகியோர்களுக்கான தொழில்சார் கற்கை நெறிகளை அரச அங்கீகாரம் பெற்ற Pebbles Academy யினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகின்றன.
- Pre School Teachers Training முன்ப ள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி (NVQ) Level-4
- 6 மாத கால கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு மற்றும் 6 மாத முன்பள்ளி ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்படும்.
- அத்தோடு (TVEC) யின் அரச அங்கீகாரம் பெற்ற Pebbles Academy யினால் NVQ-4 சான்றிதலும் வழங்கப்படும்.
- இக் கற்கை நெறிகளை நீங்களும் கற்பதன்னூடாக அரச அங்கீகாரம் பெற்ற NVQ-4 சான்றிதழ்களை பெற்று அரச மற்றும் தனியார் தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாக பெற்றுக்கொள்ளுங்கள்.
- இக் கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் (சனி ,ஞாயிறு) காலை 9.30மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை நடைபெறும் Greenfield Community Centre றில் நடைபெறுகின்றன.
- இக் கற்கை நெறிகளை நீங்களும் கற்க விரும்பினால் கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து முன்கூட்டியே உங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

Pebbles academy

Jaffna +94 77 5697 715/+9477 1779 170
Head Office +94750847474/+94 674929229
www.pebbles.academy / Email: info@pebbles.academy
Facebook page: Pebbles Academy Address: Technical College Road, Akkaraipattu, Sri Lanka.

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
## விலை மனு கேள்விக்கான அழைப்பு
## சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு அமர்த்துதல்

பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான , தகைமை வாய்ந்தவர்களிடம் கீழ்வரும் சிற்றுண்டிச் சாலை வாடகைக்கு அமர்த்துவதற் கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| இல | விபரம் | இடம் | மீளளிக்கப்படாத பணம் | மீளளிக்கப்படும் பிணைப் பணம் |
|---|---|---|---|---|
| RDHS/Cantee/ Chava/2020 | சிற்றுண்டிச்சாலையினை வாடகைக்கு அமர்த்துதல் | ஆதாரவைத்தியசாலை சாவகச்சேரி | 1000.00 | 5000.00 |

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் விருப்பமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிகதகவல்களை அலுவலக நேரங்களில் (021 2222278/4557. ext20) பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
2. ஒவ்வொரு பெறுகைக்கும் மேலேசொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாதமுறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
3. விருப்பமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் கேள்விப் படிவம் பெறுகைக்கான விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய பெறுகைக்கு மேலே குறிப்பிட்ட மீளளிக்கப்படாத தொகையை காசாக செலுத்தி பெறுகைப் பத்திரத் தினை அலுவலக நாட்களில் 12.08.2020 தொடக்கம் 21.08.2020 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்விகள் 24.08.2020 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 24.08.2020 ஆம் திகதிகாலை 10.30 மணிக்கு திறக்கப்படும் இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமூகமளிக்கலாம்

**தலைவர்,**
**பிராந்தியபெறுகைகள் குழு.**
**பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர்பணிமனை,யாழ்ப்பாணம்.**

## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies
## Admission for Postgraduate Research Programme
## Master of Philosophy (M.Phil) & Doctor of Philosophy (Ph.D.) – 2020

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil.) and Doctor of Philosophy (Ph.D.) research programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna

Refer the Faculty website (www.grad.jfn.ac.lk) for further details.

Registrar
11/08/2020

# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## சபைநிதி - 2020

1. சபைநிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக் கப்பட்டுள்ளது.
2. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(ii) இலக்க 08.05.2019 ம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவர் களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு இல்லாதவிடத்து அதனிலும் கூடிய தரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமான தரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V** இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் **12.08.2020 ம் திகதியிலிருந்து 26.08.2020 ம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 வரை** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.2000/- (வரி நீங்கலாக)** இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு **26.08.2020ம் திகதி பி.ப 14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
9. கோரப்பட்ட வேலைகளில் 1 தொடக்கம் 9 வரையான கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **63 (அறுபத்து மூன்று – 28.10.2020)** நாட்களாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | ஒப்பந்த எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41 (17)/02/C F/01/2020 | சங்கானை பகுதி வீதிகள் புனரமைப்பு (ஓடக்கரை 1ம் ஒழுங்கையின் கிளை ஒழுங்கை, குளத்தடி வீதி மிகுதி வேலை, தொட்டிலடி வீதியின் கிளை வீதி மற்றும் வைத்திய சாலை வீதியின் கிளை வீதி) | 2.977Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 25.11.2020 |
| 02 | NP/14/41 (17)/02/C F/02/2020 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புன ரமைப்பு (உடுக்கியவளை பிள்ளையார் கோவில் வீதி, சுப்பிரமணிய கோவில் வீதி, கண்ணகி அம்மன் 2ம் ஒழுங்கை) | 2.977 Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 25.11.2020 |
| 03 | NP/14/41 (17)/02/C F/03/2020 | சுழிபுரம் பகுதி வீதிகள்- குழு I புனரமைப்பு (சுழிபுரம் இறாத்தலடி வீதியின் கிளை வீதிகள், பச்சந்தை வீதியின் 1ம் கிளை ஒழுங்கை, கல்லைவேம்படி வெள்ள வாய்க்கால் வீதி – சுழிபுரம் மத்தி) | 2.979 Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 25.11.2020 |
| 04 | NP/14/41 (17)/02/C F/04/2020 | சுழிபுரம் பகுதி வீதிகள்- குழு II புனரமைப்பு (பண்ணாகம் விசவ த்தனை வீதி, கலட்டி வீதி–பனிப்புலம், தபாற் கந்தோர் பின் வீதி – சுழிபுரம் ) | 2.980 Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 25.11.2020 |
| 05 | NP/14/41 (17)/02/C F/05/2020 | சுழிபுரம் பகுதி வீதிகள் - குழு III புன ரமைப்பு (மூளாய் 2ம் ஒழுங்கை, பொன் னாலை 1ம் ஒழுங்கை, பொன்னாலை சிறீ கிருஸ்ணா சனசமூக நிலைய வீதி ) | 3.981 Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 40,000.00 | 25.11.2020 |
| 06 | NP/14/41 (17)/02/C F/06/2020 | சுழிபுரம் பகுதி வீதிகள் குழு IV புனரமைப்பு (கள்விளான் பொதுக்கிணறு கிளை வீதி, ஆதி முத்துமாரி அம்மன் வீதி, சிவபூமி கிளை வீதி) | 2,493 Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 25,000.00 | 25.11.2020 |
| 07 | NP/14/41 (17)/02/C F/07/2020 | அராலி பகுதி வீதிகள்- குழு I புனரமைப்பு (செம்மணத்தி கிளை வீதி, நொச்சிக் காட்டு வீதியின் கிளை ஒழுங்கை மற்றும் பச்சந்தை ஒழுங்கையின் கிளை ஒழுங்கை, ஒடைக்காடு 2ம் ஒழுங்கையின் கிளை ஒழுங்கை) | 2.976 Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 25.11.2020 |
| 08 | NP/14/41 (17)/02/C F/08/2020 | அராலி பகுதி வீதிகள்- குழு II புனரமைப்பு (யாழ்ப்பாணம் 1ம் வீதி, யாழ்ப்பாணம் 1ம் வீதி மற்றும் கிளை வீதி, யாழ்ப் பாணம் 1ம் வீதியின் கிளை வீதி மற்றும் புளியடி ஒழுங்கையின் கிளை ஒழுங்கை) | 2,979 Mn | 60 நாட்கள் | C8 / C7 வீதிப் புனரமைப்பு | 30,000.00 | 25.11.2020 |
| 09 | NP/14/41 (17)/02/C F/09/2020 | தலைமை அலுவலக சபா மண்டபம் புனரமைப்பு | 2,762 Mn | 90 நாட்கள் | C8 / C7 கட்டடம் புனரமைப்பு | 30,000.00 | 25.11.2020 |

11. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் **18.08.2020** அன்று **பி.ப 14.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

த.நடனேந்திரன்
தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
12.08.2020

## இந்தியாவில்...

வழியாக யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர்கள் சட்டவிரோதமாக நாடு திரும்பினர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பா ணச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அதேவேளை, அவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தே கத்தில் சிறைச்சாலையில் தனிமைப்படுத் தப்பட்டிருந்தனர். பாலகிஸ்ணன் நீரிழிவு நோயாளி என்பதுடன், சிறுநீரக செயலிழப் பாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந் தார். நோய் நிலை காரணமாக கடந்த 31ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந் தார். இந்தநிலையிலேயே சிகிச்சை பயன ளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார். சிறுநீரக செயலிழப்பால் அவர் உயிரிழந் தார் என்று தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ். போதனா வைத் தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண் டார். (த-20,26)

## தேசியப்...

யில் உறுதியளிக்கப்பட்டவாறு தமது கட்சி களுக்கு தேசியப்பட்டியல் ஒதுக்கீடு வழங் கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற் றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் தலைவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால், தமது அணியில் இருப்பவர்க ளுக்கு முன்னுரிமை வழங்கும் முடிவி லேயே சஜித் இருந்தார். இதனால் கூட்ட ணிக்குள் குழப்பம் ஏற்பட்டது. இறுதி முடிவை எடுப்பதற்காக சஜித்துக்கு நேற்று வரை தமிழ் முற்போக்கு கூட்டணி காலக் கெடு விதித்திருந்தது.

இந்தப் பின்னணியில் ஐக்கிய மக்கள் சக் தியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிக ளின் தலைவர்கள் கூட்டம் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்றுக் கொழும்பில் நடை பெற்றது. அதிலும் இறுதி முடிவு எட்டப்பட வில்லை. அதையடுத்துத் தேசியப்பட்டியல் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தேசியப்பட்டியல் வேட்பாளர் விவரத்தை இன்று அறிவிக்க வுள்ளன. (எ-44)

## தீர்வு...

தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.

உதயன்' பத்திரிகைக்கு நேற்று இரவு கருத் துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் வாக்கு களைத் திட்டமிட்டு சிதறடித்து தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் ஆசனங்களை ஆளும் கட்சியினர் குறைத்துள்ளனர். எனினும், நாம் பலம் குறையவில்லை. இனிவரும் காலங்களில் இழந்த ஆசனங் களை நாம் கைப்பற்றியே தீருவோம்.


மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள மஹிந்த அரசை சர்வதேச சமூகம் நன்கு உன்னிப் பாக அவதானித்துக் கொண்டு இருக்கின் றது. கடந்த காலங்களில் செயற்பட்டதைப் போன்று இனியும் அரசு செயற்பட முடியாது. நல்லாட்சி அரசு மேற்கொண்ட புதிய அரச மைப்புக்கான பணிகள் இடைநடுவில் நிற்கின்றன. அந்தப் பணிகளை இந்த அரசு ஆரம்பிக்க வேண்டும். இந்த அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் உள்ளது. எனவே, புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது சுலபமானது.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும்-என்றார். (எ-22)

# டோனியின் தலைமை தனித்துவம் மிக்கது

## ரசிக்கிறார் முரளி





புதுடில்லி, ஓக.12

**டோனியின் தலைமைத்துவ அணுகுமுறையானது மிகவும் சிறப்பானது என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற 20 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இளம் வயது கப்டனான டோனி இந்திய அணிக்குத் தலைமை தாங்கி கிண்ணத்தை வென்று கொடுத்தார். டோனியின் தலைமைத்துவ அணுகுமுறை மற்றும் கோட்பாடுகள் பார்ப்பதற்கு மிகவும் அருமையாக இருக்கும். ஏனெனில் அவர் பந்துவீச்சாளரிடம் பந்தைக் கொடுத்து தமது பந்து வீச்சுக்கு தகுந்த மாதிரி களத்தடுப்பை அமைத்து விட்டு பந்து வீசும்படி பந்து வீச்சாளருக்குக் கூறுவார். அது சரியாக அமையாவிட்டால், பந்துவீச்சாளரிடம் அனுமதி பெற்று தானே களத்தடுப்பை ஒழுங்குபடுத்துவார் பந்துவீச்சாளர் நன்றாக வீசிய பந்தில் துடுப்பாட்ட வீரர் ஆறு ஓட்டங்கள் எடுத்தால் பந்து வீச்சாளரைக் கைதட்டிப் பாராட்டுவார்.

ஆறு ஓட்டங்கள் .பெற்றதுக்காக கவலைப்பட வேண்டாம். நல்ல பந்தைத் தான் துடுப்பாட்ட வீரர் தனது திறமையால் ஆறு ஓட்டங்களாக அடித்து இருக்கிறார் என்று தேற்றுவார். இதுபோன்ற பாராட்டுதல்கள் எல்லோரிடம் இருந்தும் வராது. சக வீரர் தனது தவறைத் திருத்திக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லோருக்கும் தெரியும்படி வெளிப்படையாகச் சொல்லாமல், தனியாக அழைத்து தெரிவிப்பார். அது அவருடைய வெற்றிகரமான கப்டன் செயல்பாட்டுக்கு ஒரு காரணமாகும். அமைதியாக சிந்திக்கும் திறன் கொண்ட அவர் மூத்த வீரர்கள் கூறும் கருத்துகளைக்கேட்டுஆலோசித்து முடிவு எடுப்பார். அணியை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு எந்த வீரர்கள் தனக்கு தேவை என்பதில் அவர் மிகவும் கவனமாக இருப்பார் - என்றார். (ரி-2)

# கார்ப் பந்தய போட்டியில் நெதர்லாந்து வீரர் முதலிடம்

லண்டன், ஓக.12

பார்முலா1 கார்பந்தயத்தின் 5 ஆவது சுற்றுப் போட்டியில், நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் முதலிடம் பிடித்துள்ளார்.

இப்போட்டி இங்கிலாந்தின் சில்வர்ஸ்டோன் ஓடுதளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தச் சுற்றானது, பார்முலா1 கார்பந்தயம் ஆரம்பிக்கப்பட்டு 70 ஆண்டுகள் முடிவடைவதைக் கொண்டாடும் வகையில் நடைபெற்றது. இந்தச் சுற்றில் வழக்கம் போல் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர். இதில் 306.198 கிலோமீற்றர் பந்தய தூரத்தை நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) 1 மணி 19 நிமிடம் 41.9 வினாடிகளில் எட்டி முதலிடம் பிடித்ததோடு 25 புள்ளிகளையும் தட்டிச் சென்றார்.

இதன் மூலம் மெர்சிடஸ் அணியின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டிய அவர், இந்தச் சுற்றில் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளார். அவரை விட 11.32 வினாடி பின்தங்கிய 6 முறை சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் (மெர்சிடஸ் அணி) 2 ஆவதாக வந்து 19 புள்ளிகளைப் பெற்றார். பின்லாந்து வீரர் வால்டெரி போட்டோஸ் (மெர்சிடஸ் அணி) 3 ஆவது இடத்தைப் பிடித்தார்.

இதுவரை நடந்துள்ள 5 சுற்று போட்டிகளின் முடிவில் சம்பியன்ஷிப் பட்டத்துக்கான வாய்ப்பில் ஹாமில்டன் 107 புள்ளிகளுடன் முதலிடத்திலும், வெர்ஸ்டப்பென் 77 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தி லும் உள்ளனர். அடுத்த சுற்று போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி ஸ்பெயினில் நடைபெறவுள்ளது. (ரி-2)




# சூப்பர் கிங்ஸ் அணி சென்னையில் பயிற்சி

புதுடில்லி, ஓக.12

சென்னையில் பயிற்சி மேற்கொள்ளத் தமிழக அரசிடம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் சார்பில் அனுமதிகோரப்பட்டுள்ளது. மிக விரைவில் கட்டுப்பாடுகளுடன் கூடிய அனுமதியை தமிழக அரசு தரும் என்று சூப்பர் கிங்ஸ் அணி எதிர்பார்த்துள்ளது.

கொரோனா பாதிப்புக் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த ஐ.பி.எல் போட்டிகள், ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்ரெம்பர் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக ஐ.பி.எல் அணிகள் முழு வீச்சில் தயாராகி வருகின்றன. கொரோனா அச்சுறுத்தல் இருப்பதால் வழக்கத்துக்கு மாறான பல பாதுகாப்புகளும், திட்டங்களும் இந்தமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகம் செல்வதற்கு முன்னதாக சென்னையில் ஒரு வார கால பயிற்சி முகாமில் சென்னை அணி வீரர்கள் ஈடுபடத் திட்டமிட்டுள்ளனர். ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை பயிற்சியை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. கொரோனா அச்சுறுத்தல் இருப்பதால் சென்னை அணி வீரர்கள், நிர்வாகத்தினர், பயிற்சியாளர்களைத் தவிர்த்து மைதானத்துக்குள் எவரும் அனுமதிக்கப்படாமல் பயிற்சி மேற்கொள்ள சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. (ரி-2)

# இணையத்தை கலக்கும் இந்திய வீரராகக் கோலி!

புதுடில்லி, ஓக.12

உலகளவில் இணையத்தின் மூலம் அதிகம் தேடப்பட்ட கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் இந்திய அணிக் கப்டன் விராட் கோலி முதல் இடத்தை பிடித்துள்ளார்.

இந்திய அணியின் தலைசிறந்த வீரராக விராட் கோலி உள்ளார். விளம்பரம் மற்றும் சம்பளம் மூலம் அதிக வருமானம்பெறும்வீர ராகவும் இவர் திகழ்கின்றார்.




விராட் கோலிக்கு அடுத்தப்படியாக சிறந்த வீரராக ரோகித் சர்மா உள்ளார். புகழ்பெற்ற பிரபலமாக எம்.எஸ்.டோனி திகழ்ந்து வருகிறார். இந்த நிலையில உலக அளவில் இணையத்தில் அதிகம் தேடப்பட்ட கிரிக்கெட் வீரர்கள், கிரிக்கெட் அணிகள் பற்றி செம்ருஷ் ஆய்வு நடத்தியது. இதில் விராட் கோலி இந்த வருடம் ஜனவரியில் இருந்து ஜூன் வரையான காலப் பகுதியில் சராசரியாக 16.2 இலட்சம் முறை தேடப்பட்டு முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

ரோகித் சர்மாவின் பெயர் சராசரியாக 9.7 இலட்சம் முறையும், எம்.எஸ்.டோனி 9.4 இலட் சம் முறையும், ஜார்ஜ் மெக்கே 9.1 இலட்சம் முறையும், ஜோஷ் ரிச்சார்ட்ஸ் 7.1 இலட்சம் முறையும், ஹர்திக் பாண்ட்யா 6.7 இலட்சம் முறையும், சச்சின் 5.4 இலட்சம் முறையும், கிறிஸ் மேத்யூஸ் 4.1 இலட்சம் முறையும், இஷ்ரேயாஸ் அய்யர் 3.4 இலட்சம் முறையும் இணையத்தில் தேடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ரி-2)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி மாலினி பாஸ்கரன்

**(வட மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் முன்னைநாள் பொருளாளரும் முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும்)**



அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

வடமாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம்

## புதிய...
லான இந்த நிகழ்வை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

28 அமைச்சர்களும் 40 இராஜாங்க அமைச்சர்களும் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர். இலங்கையில் தலதா மாளிகையில் அமைச்சரவை பதவியேற்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென அஸ்கிரிய பீடம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் எண்ணிக்கை , அமைச்சு உள்ளடக்கும் நிறுவனம் மற்றும் தொடர்பான சட்டம் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தமுறை அமைச்சரவை 28 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அமைச்சரவை அமைச்சொன்றின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட 40 இராஜாங்க அமைச்சுக்கள் வழங்கப்படவுள்ளன. அதேவேளை பிரதி அமைச்சு நியமனம் பற்றி எவ்வித கருத்தும் வெளிப்படுத்தப்படவில்லை.

**பாதுகாப்பு**

இன்று இடம்பெறவுள்ள பதவிப்பிரமாண நிகழ்வில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பல முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளவுள்ள நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. தலதா மாளிகை வளாகத்தில் பெருமளவான பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். கண்டி நகரிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் மாற்று போக்குவரத்து ஒழுங்குகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**முன்னேற்பாடுகள்**

கண்டி தலதா மாளிகையின் மகுல் மடுவ வளாகத்திலேயே புதிய அமைச்சரவையின் பதவிப்பிரமாண நிகழ்வு இடம் பெறவுள்ளது. இந்த பகுதியில் சிவப்பு மற்றும் வெள்ளை நிற வர்ணங்களில் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.(எ)

## ஆட்டம்...
றும் முன்னாள் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரை எதிர்வரும் வாரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்ய அவர்கள் அங்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று குறித்த பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அப்போதைய சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரை ஓகஸ்ட் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அப்போதைய இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவை எதிர்வரும் 18ஆம் திகதி, குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணை பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் குறித்த முன்னறிவிப்பு புலனாய்வுத் தகவல்களை முதலில் பெற்ற அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன, நேற்று எட்டாவது நாளாக, ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தார். இதன்போது ஊடகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (22)

## 'கோதா'வில்...
நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பின்னடைவைச் சந்தித்துள்ளது. இந்த நிலையில் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பிலும் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர் மூவரும் இணைந்து, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசாவுக்கே அதனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர். ஆனாலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி. துரைராசசிங்கம், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலையரசனின் பெயரை பிரேரித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியிருந்தார். இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தையும், அரசியல் செயற்குழுக் கூட்டத்தையும் உடனடியாகக் கூட்டுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கத்துக்குப் பணித்துள்ளார்.

கட்சியின் செயலரால் மத்திய குழுக் கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்படா விட்டால், கட்சியின் தலைவர் அதற்கான அழைப்பை விடுக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

## எனக்கு...
யல் நியமனத்தை மாவை சேனாதிராசாவுக்கே வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. எனினும், அந்தத் தீர்மானத்தை மீறி அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் தவராசா கலையரசனுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டது. அதை உறுதிப்படுத்தும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியது. அதையடுத்து தமிழ் அரசுக் கட்சி மட்டுமல்லாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளும் கடும் அதிருப்தியடைந்துள்ளன.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்றிரவு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் யாருக்கு உரியது என்பதை கட்சியின் பொதுச்செயலாளர் துரைராஜசிங்கமே தேர்தல்கள் செயலகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார். எனவே, இந்த விவகாரம் தொடர்பில் நான் பதிலளிக்கமாட்டேன். இது தொடர்பில் துரைராஜசிங்கத்திடம் கேட்கவும். அவர்தான் இந்த விடயதானத்துக்குப் பொறுப்பு-என்றார். (எ-22)

## தமிழர்...
மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இலங்கையின் பிரதமராக நான்காவது தடவையாகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் சுபநேரத்தில் அலரி மாளிகையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன்பின்னர் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த முறை 9 ஆசனங்களை மட்டும் பெற்றுள்ளது. ஆனால், அங்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் அதன் பங்காளிக் கட்சிகளும் இணைந்து 11 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன.

அதாவது யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தலா 2 ஆசனங்களையும், அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் 4 ஆசனங்களையும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையும் நாம் இலகுவாகக் கைப்பற்றியுள்ளோம். மட்டக்களப்பில் பிள்ளையான் சிறைக்குள் இருந்து கொண்டே அந்த மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார் என்பது விசேட அம்சமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோட்டையை நாம் கைப்பற்றியதன் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் மனதை வென்றுவிட்டோம் என்பது நிரூபணமாகியுள்ளது. கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்கள் கடும் அதிருப்தி கொண்டுள்ளனர். அவர்கள் எம்மை நம்புகின்றனர். அவர்களின் அனைத்துப்பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனியாவது திருந்த வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் நீரோட்டத்தில் இருக்காமல் நாட்டினதும் மக்களினதும் நலன்களைக் கருத்தில்கொண்டு அவர்கள் செயற்படவேண்டும்-என்றார்.(எ-22)

## துணைவேந்தர்...
சுற்றறிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்காகக் கடந்த மே 15 ஆம் திகதி பல்கலைக்கழகப் பதிவாளரால் பத்திரிகைகள் மூலமாக விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதற்கமைய கிடைத்த ஏழு விண்ணப்பங்களில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ந. தனேந்திரனால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் உரிய முறைப்படி நிரப்பப்படாததால் நிராகரிக்கப்பட்டது.

முன்னாள் துணைவேந்தரும், கணிதப் புள்ளி விவரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் இ. விக்னேஸ்வரன், உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு. மிகுந்தன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல்நம்பி, மருத்துவ பீடாதிபதி வைத்திய நிபுணர் எஸ். ரவிராஜ், விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும், கணிதப் புள்ளி விவரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, புள்ளி விவரவியல் துறைப் பேராசிரியர் செ. இளங்குமரன் ஆகியோரின் விண்ணப்பங்கள் மதிப்பீட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பேராசிரியர் அபேகுணவர்த்தன தலைமையிலான மதிப்பீட்டுக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.

இந்த ஆறு பேரிலிருந்து ஐந்து பேரைத் தெரிவு செய்வதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட மூவருடன், பல்கலைக்கழக மூதவையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பேரவையால் முன்மொழியப்பட்ட இருவரையும் கொண்ட, மதிப்பீட்டுக் குழு இன்று காலை கூடவிருக்கிறது.

இந்த மதிப்பீட்டுக் குழு ஒவ்வொரு விண்ணப்பதாரிகளாலும் தனித்தனியாக குழுவின் முன் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளையும் மதிப்பீடு செய்த பின்னர், 6 பேரில் இருந்து திறமை அடிப்படையில் புள்ளிகளைப் பெறும் 5 பேரின் விவரங்களைப் பேரவை உறுப்பினர்களின் மதிப்பீட்டுக்காக இன்றைய கூட்டத்தில் சமர்ப்பிக்கும்.

மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களால் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும், தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டதைப் போலவே, ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளையும் சுற்றறிக்கையின்படி தனித்தனியாக மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்குவர். இந்த மதிப்பீடு இன்று பிற்பகல் நடக்கவுள்ளது.

சுயாதீன மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களின் தனித் தனி மதிப்பீட்டுப் புள்ளிகள் மற்றும் பேரவை உறுப்பினர்களின் தனித்தனி மதிப்பீட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் பெறும் திறமைப் பட்டியல் பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையுடன், தகுதி வாய்ந்த அதிகாரியால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு நாளையே அனுப்பப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு ஊடாகத் தனது பரிந்துரையை ஜனாதிபதிக்கு முன்வைக்கும். 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் படி, ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அவர்களில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்வார்.

அதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த காலங்களில் தனக்கெதிராகப் பல ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்துத் தன்னைப் பழிவாங்கும் வகையில் செயற்பட்டதனால், துணைவேந்தர் தெரிவிலும் தான் வேண்டுமென்றே பழிவாங்கப்படலாம் என்றும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தனக்கு நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று விண்ணப்பதாரிகளுள் ஒருவரான பேராசிரியர் செ. இளங்குமரன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முற்காப்புக் கோரிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் காரணம் எதுவும் கூறப்படாமல் பதவியில் இருந்து அகற்றப்பட்ட பின் துணைவேந்தருக்கான அதிகாரங்களுடன் கடந்த வருடம் மே மாதம் முதல் மூன்று மாத காலத்துக்கு வாழ்நாள் பேராசிரியர் க. கந்தசாமி தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டார். தகுதி வாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்ட பின்னர் துணைவேந்தர் தெரிவுக்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்த போதிலும், கடந்த நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாக அந்தப் பணிகளைப் பிற்போடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியிருந்தது.

பின்னர் ஜனாதிபதியாகக் கோத்தாபய ராஜபக்ச தெரிவு செய்யப்பட்ட பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், பல்கலைக்கழகங்களின் பேரவைகளும் செயலிழந்ததன் காரணமாக இழுபறி நிலையிலிருந்த துணைவேந்தர் தெரிவு, கடந்த பெப்ரவரி மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய ரத்துச் செய்யப்பட்டிருந்தது. பேராசிரியர் க. கந்தசாமிக்குத் தகுதி வாய்ந்த அதிகாரியாக மூன்று மாதங்களுக்கொரு முறை நியமனம் நீடிக்கப்பட்டு வந்தது. (எ)

### சீன கம்யூனிஸ்ட் அரசுக்கு எதிராக விமர்சனம்:

# தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரபல பத்திரிகை உரிமையாளர் கைது!

பீஜிங், ஓக.12

ஹொங்கொங் நகரின் பிரபல பத்திரிகையான அப்பிள் டெய்லி (Apple daily) பத்திரிகையின் உரிமையாளர் ஜிம்மி லாய் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் கைது செய்யப் பட்டுள்ளார்.

நகரின் ஜனநாயக சார்பு இயக்கத்திற்கு ஆதரவளித்தமை, சீனாவை விமர்சித்தமை, வெளிநாட்டு சக்திகளுடன் கூட்டு வைத்தமை போன்ற சந்தேகங்களின் அடிப்படையில் அவர் கைது செய்யப் பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் பீஜிங்கால் ஹொங்கொங் மீது விதிக்கப்பட்ட புதிய தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளதுடன் நிறுவனத்தின் தலைமையகமும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிப்பதற்காக வெளிநாட்டுப் படைகளுடன் கூட்டு சேருதல், மோசடி செய்ய சதித்திட்டம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் 39 முதல் 72 வயதுக்குட்பட்ட ஏழு ஆண்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜிம்மி லாய் ஹொங்கொங்கில் ஜனநாயகத்தை வலியுறுத்தியும் சீனாவின் சர்வாதிகார ஆட்சியையும் தொடர்ந்து விமர்சித்தும் வந்தார். ஹொங்கொங் மக்கள் நடத்தி வந்த தொடர் போராட்டத்துக்கும் இவர் ஆதரவு தெரிவித்திருந்தார். தன்னை ஒரு பிரச்சினைக்குரிய நபர் என சீனா கருதுவதாகவும் சிறைக்குச் செல்ல தான் தயாராக இருக்கிறார் எனவும் அவர் ஏற்கெனவே கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி1)




## “போராடுவோம்”

பீஜிங், ஓக.12

கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பிள் டெய்லி பத்திரிகை ஜிம்மி லாய் கைதாகிய புகைப்படத்துடன் 'போராடுவோம்' என்று தலைப்புடன் செய்தி வெளியிட்டுள்ளது. ஜனநாயக சார்பு பத்திரிகையான அப்பிள் டெய்லியின் பிரதிகளை வாங்க வாசகர்கள் நேற்று அதிகாலையிலிருந்து வரிசையில் காத்திருந்தனர்.

வழக்கமாக 100,000 பிரதிகள் அப்பிள் டெய்லி அச்சிடப்படுகின்றபோதிலும், இந்த சம்பவத்திற்காக 500,000 க்கும் மேற்பட்ட பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன என செய்தித்தாளின் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# கொரோனாத் தடுப்பூசியை அறிமுகப்படுத்தியது ரஷ்யா

கொழும்பு, ஓக.12

கொரோனா வைரஸ் தடுப்பூசியை அறிமுகப்படுத்தி, அதில் வெற்றி அடைந்துள்ளது என்று தெரிவித்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியை அறிமுகப் படுத்திய நாடாக ரஷ்யா விளங்குகின்றது என்றும் தெரிவித்துள்ளார். அந்த தடுப்பூசி தனது மகளுக்கும் செலுத்தப்பட்டு வெற்றியளித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசி பந்தயத்தில் உலகின் அனைத்து நாடுகளையும் முந்த விரும்பிய ரஷ்யா, கொரோனா வைரஸ் தடுப்பூசியை வெளியிட்ட உலகின் முதல் நாடாக பதிவு செய்துள்ளது. ரஷ்ய ஜனாதிபதி புடின் இதை செய்தியாளர்களிடம் முறைப்படி நேற்று அறிவித்தார்.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் கமலேயா ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள இந்த தடுப்பூசி சோதனை கட்டமாக பொதுமக்களுக்கு நேற்று முதல் வழங்கப்படுகின்றது.

மருத்துவ வல்லுநர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு முதலில் தடுப்பூசி போடப்பட உள்ளது. அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி பலப்படுத்தப்பட்ட பின்னர் தடுப்பூசியின் செயல்திறன் தீர்மானிக்கப்பட உள்ளது என்றும், ஒக்ரோபரில் முழுமையாக மக்கள் பயன்பாட்டுக்கு வரும் என்றும் ஏற்கனவே ரஷ்யா கூறியிருந்தது.


இந்தநிலையில் கொரோனோவுக்கு எதிரான உலகின் முதல் தடுப்பூசியை பதிவு செய்துள்ளோம் என ரஷ்ய அதிபர் புடின் அறிவித்துள்ளதுடன், உடல் நிலை சரியில்லாமல் இருக்கும் தனது மகளுக்கே புதிய கொரோனா வைரஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றும் புடின் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் மிகைல் முராஷ்கோவிடம் தடுப்பூசி குறித்து தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்ட புடின், "இது மிகவும் திறம்பட செயல்படுகிறது" என்பதும், "நிலையான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது என்பதும் தனக்குத் தெரியும்" என்றார்.

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிக்கு அனுமதியை ரஷ்ய சுகாதாரத்துறை வழங்கியுள்ள நிலையில் கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியை வழங்கிய முதல் நாடாக ரஷ்யா உள்ளது. பாதுகாப்பு மற்றும் செயல்திறனைச் சோதிப்பதற்கான மருத்துவ பரிசோதனைகளின் இறுதிக் கட்டம் தொடர்ந்தாலும், இந்த வளர்ச்சி ரஷ்யாவிலுள்ள மக்களில் பெரும்பாலானோருக்கு தடுப்பூசி போடுவதற்கு வழிவகுத்துள்ளது.

உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது ரஷ்யா, தடுப்பூசியை வெளியிடுவதற்கான வேகம் ஒரு பயனுள்ள தயாரிப்புக்கான உலகளாவிய போட்டியில் வெல்வதற்கான அதன் உறுதியை எடுத்துக் காட்டிகிறது. இது ரஷ்யாவின் அறிவியல் மற்றும் பாதுகாப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளதுடன் தேசிய கௌரவத்தையும் ஏற்படுத்தக் கூடும்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுநோயைத் தடுக்கும் முயற்சியில் 100 க்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் உலகம் முழுவதும் உருவாக்கப்படுகின்றன. இந்நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளின்படி, குறைந்தது நான்கு தடுப்பூசிகள் மூன்றாம் கட்ட மனித சோதனைகளில் உள்ளன. (எ)



# வெள்ளை மாளிகைக்கு அருகில் துப்பாக்கிச்சூடு

வொஷிங்டன், ஓக.12

அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு அருகில் நேற்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இனந்தெரியாத நபரொருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். பாதுகாப்பு பிரிவினரின் பதில் தாக்குதலில் சந்தேகநபர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சம்பவத்தையடுத்து ஜனாதிபதி ட்ரம்ப் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார். எனினும் சிறிதுநேரத்தின் பின் மீண்டும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. (ரி1)

**இரசாயனவியல்**

A/L 2020, 2021, 2022 பிரிவுகளுக்கான வகுப்புக்கள் தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்.
[கடந்தகால வினாப்பத்திரங்கள், துரித மீட்டற்பயிற்சிகள் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 389 2285

**வேலைவாய்ப்பு**

மாலை Job Bank (PVT) LTD Company யில் அனைத்து விதமான வேலைவாய்ப்புக்கள் எம்மிடம் உள்ளன.
முந்தும் 18 பேருக்கு முன்னுரிமை.
உடன் தொடர்பு:-
077 4088 241, 077 1328 912



பிரேஸிலில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தைக் கடந்துள்ளது. இந்நிலையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ரியோ டி பாஸ் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் 1000 சிவப்பு நிற பலூன்கள் பறக்கவிடப்பட்டன. (ரி1)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.